viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 059 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 04 புதன்கிழமை (16.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# ஐ. நா. அறிக்கைக்கு

## 19 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை பதிலளிக்கும்

### வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ்



(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சல் பச்லட்டால் முன்வைக்கப்படவுள்ள அறிக்கையின் பிரதி இலங்கை அரசாங்கத்துக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதற்கு எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் பதிலளிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு



(வவுனியா)

வவுனியா கணேசபுரம், மரக்காரம்பளை வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் பண்டாரிக்குளத்தினை சேர்ந்த ஸ்ரீரஞ்சன் (வயது - 32) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார். 15

## மட்டுவிலில் கிணற்றுக்குள் விழுந்த பெண் மரணம்

### பரிசோதனையில் தொற்று உறுதி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-மட்டுவில் கிழக்குப் பகுதியில் கிணற்றுக்குள் விழுந்து உயிரிழந்த வயோதிபப் பெண்ணிற்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

குறித்த 73 வயதான வயோதிபப் பெண் நேற்று செவ்வாய்க்கிழமை காலை தனது வீட்டிற்கு அருகில் உள்ள வயல் கிணறு ஒன்றில் விழுந்து உயிரிழந்த நிலையில் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 15

## பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்

### 12 வருடங்களின் பின் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட யாழ் - கரவெட்டியை சேர்ந்த ஒருவர் 12 வருடங்களின் பின்னர் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

இறுதி யுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு கொழும்பில் நிதி சேகரித்து வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் கடந்த 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி கைது செய்யப்பட்ட கரவெட்டியை சேர்ந்த 56 வயதான கந்தப்பு ராஜசேகர் என்பவரே 15

## பயங்கரவாத சட்டத்திற்கு எதிராக கொழும்பில் கையெழுத்து பிரசாரம்




(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்ய வலியுறுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இடம்பெற்றுவரும் கையெழுத்து பிரசாரம் கொழும்பில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி இரண்டு மணி நேரங்களுக்கு மேலாக இடம்பெற்றது.

மதத் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், 15

## கொரோனா 30 பேர் பலி


(கொழும்பு)

நாட்டில் மேலும் 30 கொரோனா மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய நாட்டில் பதிவான 15

## விமர்சனக் குரல்களை மௌனமாக்குவது ஜனநாயகத்தை கேள்விக்குள்ளாக்கும் செயல்

### ஐ. நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் டுவிட்


Hanaa Singer-Hamdy
@SingerHanaa

#Journalists & #activists play a fundamental role in ensuring a democratic society and their protection is vital to ensure freedom of expression, transparency and accountability. The silencing of critical voices, undermines public debate, freedom and the human rights of everyone.

1:18 PM · Feb 15, 2022

விமர்சனக் குரல்களை மௌனமாக்குவது ஜனநாயகத்தை கேள்விக்குள்ளாக்கும் செயல் என ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் டுவிட் செய்துள்ளார்.

(07 ஆம் பக்கம் பார்க்க)

## வல்லிபுர ஆழ்வார் தேர் திருவிழாவில்

### 5 சங்கிலிகள் அறுப்பு

(கரணவாய்)

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற தேர்த் திருவிழாவில் 5 தங்கச் சங்கிலிகள் களவாடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள் 15

### கையடக்கத் தொலைபேசியுடன்

## மன்னாரில் பரீட்சை எழுதிய அதிபர் மகன்

(மன்னார்)

மன்னார் - மடு கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஒரு பாடசாலையில் உயர்தரப் பரீட்சையில் கணித பாட பரீட்சையின்போது ஒரு குறிப்பிட்ட பாடசாலை அதிபரின் மகன் குறித்த பாடசாலை பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத்தொலைபேசியை கொண்டு சென்று பிறிதொரு ஆசிரியரின் உதவியுடன் பரீட்சை எழுதியபோது கையும் 15

### 12 1/2 பவுண் நகை

## அராலியில் வீடு புகுந்து திருட்டு

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி தெற்கு அமெரிக்கன் பாடசாலைக்கு முன்பாக உள்ள வீட்டில் 15 இலட்சம் பெறுமதியான 12 1/2 பவுண் 15

### ரூ. 6 மில்லியன் பெறுமதியான

## ஐஸ் போதையுடன் நெல்லியடியில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

6 மில்லியன் ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப்பொருளை கடத்த முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெல்லியடி நகரம் பருத்தித்துறை வீதியில் வைத்து நேற்று மாலை இருவரும் கைது செய்யப்பட்டனர்.

காங்கேசன்துறை 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரகண விவாகமூர்த்தம்


**மணமகன்**

சிவஸ்ரீ சதாசிவம் ஐயாவின் பூட்டனும்,
சிவஸ்ரீ தில்லைநாதன் ஐயாவின் பேரனும்,
சிவஸ்ரீ அழகேசக் குருக்கள் ஸ்ரீமதி அனுஷாம்மா
தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனுமாகிய
**சுகிர்தன்** அவர்கள்.

**மணமகள்**

சிவஸ்ரீ வீரபாகு ஐயாவின் பூட்டியும்,
சிவஸ்ரீ ஆறுமுக ஐயாவின் பேத்தியும்,
சிவஸ்ரீ பாஸ்கரக்குருக்கள் ஸ்ரீமதி மதிவாணியம்மா
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி
**மல்லிகார்ச்சனா** அவர்கள்.

**மணநாள்**
11.02.2022 வெள்ளிக்கிழமை,
ஜேர்மனி



மண்பற்றுடை குடும்பங்களின்
மகத்தான வாரிசுகள்
மணவாழ்வில் இணைந்திட்டீர்
மகிழ்வான வாழ்த்துதல்கள்.

பண்பிற் சிறந்தநல்
பரம்பரை சேர்ந்தோரே
அன்பில் உயர்ந்த உம்
அகங்களை வாழ்த்துகிறோம்.

துயர்துடைக்கும் கரமுடை
தூயமனம் படைத்தோரே
சுகவாழ்வு கண்டிங்கே
நிறைவாழ்வு கொண்டிடுவீர்.


நற்சந்ததி தந்திட்ட
பொற்சிகர மணிகளே
நற்சந்ததி கண்டுநீரும்
நல்வாழ்வு பெற்றிடுவீர்.

அறப்பணி ஆன்மிகப்பணி
சிறப்பாய்ப்பணி தொடரவே
அகமது நிறைந்துநாம்
அன்போடே வாழ்த்துகிறோம்

*மனம்நிறைய வாழ்த்தும்,*
திரு. வை.கமலராஜா, ஜேர்மனி (நிறுவுநர்),
பணியாளர்கள், பயனாளர்கள்,
இஷானியா கலாமன்றம், புதுக்குடியிருப்பு, வன்னி.

(C-3788)

# நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
14.08.1948

மறைவு
04.01.2022

அமரர் கலாநிதி
## வேலுப்பிள்ளை யுகபாலசிங்கம்

**(ஓய்வுபெற்ற ஆசிரியர் – சென்.ஜோன்ஸ் கல்லூரி)**

எங்கள் குடும்பத் தலைவர் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் தந்தவர்கள், தொலைபேசியில் அழைத்து ஆறுதல்படுத்தியவர்கள், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், மலரஞ்சலி வைத்து அஞ்சலி செலுத்தியவர்கள், கண்ணீர் அஞ்சலி பதாகைகளையும் அச்சிட்டு வழங்கியவர்கள், தேவையறிந்து உதவிகள் புரிந்தவர்கள், சமூகவலைத்தளங்களில் தமது ஆதங்கத்தை பகிர்ந்தவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் 14.02.2022 திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (16.02.2022) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்றது. தொடர்ந்து 18.02.2022 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் இல.37, இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ராஜா கிறீம் கவுஸில் "கம்சியா மஹால்" நடைபெறவுள்ள மலர் அஞ்சலி நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் உங்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(10207) குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி தவமணி இராசையா



பிறப்பு 18.08.1935
இறப்பு 14.02.2022

ஓட்டுமடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி இராசையா அவர்கள் கடந்த 14.02.2022 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் கனகமுத்து, லோகேஸ்வரன், காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிறேமாவதி, சரோஜினிதேவி ஆகியோரின் மைத்துனியும் வசந்தி, சாரதா, உதயகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் மோகனின் மாமியாரும் ஜெயச் சித்திரா - கந்தவேள், காயத்திரி - குலேந்திரராஜா, நிலானி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் உமாசிவன், அபிராமி, கார்த்திகேயன், தாட்சாயினி, சச்சின், சுகானா, கௌரி, கபிலன், துஷா, ஜெனனி, சபு ஆகியோரின் பூட்டியும் வைதேகி, ஜானகி, மாலதி, அபிராமி, செந்தூரன், கோமதி, பிறேம்நாத், அமல்நாத், ஜெயந்தி, ஜெயம், ஜெயா, லதா, ஜெகதீஸ்வரன் (கண்ணன்) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.02.2022) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

577/1, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:- லோகேஸ்வரன் - 077 854 8213
வசந்தி - 074 270 3551
ஜெயச்சித்திரா - 074 270 3571

(10217)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக இடம்பெற்றது.
(படங்கள்:-ரவிசாந், கஜிந்தன், மகாலிங்கம்)

# சைவ சமயத்தை இழிவுபடுத்தும் செயல் முற்றுப் பெற வழி செய்ய வேண்டும்

## அகில இலங்கை இந்துமா மன்றம் கடிதம்

(மன்னார்)

**சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கேதீச்சர ஆலய கிழக்கு வீதியில் அவசரமாக கிறிஸ்தவ வழிபாட்டுச்சின்னம் நிறுவப்பட்டுள்ளமை சைவ மக்களை அதிர்ச்சிக்கு உட்படுத்தியுள்ளது என அகில இலங்கை இந்துமாமன்ற உபதலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.**



திருக்கேதீச்சர ஆலய கிழக்குத் தெருவில் அமைக்கப்பட்ட கிறிஸ்தவ சின்னம் தொடர்பில் அகில இலங்கை இந்துமாமன்றத்தால் நேற்று முன்தினம் ஜனாதிபதி, பிரதமர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே கலாநிதி ஆறுதிரு முருகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஏற்கனவே எவ்வித அனுமதியுமின்றி கிழக்குத் தெருவில் கத்தோலிக்க ஆலயம் கட்டப்பட்டது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது.

கிழக்குத்தெரு வீதி யில் திருக்கேதீச்சர பெருவிழாக் குறித்த வரவேற்பு வாயில் அமைக்கப்பட்டபோது அதனை கத்தோலிக்கத் துறவி உட்பட சிலர் கூடி உடைத்து நிறுத்தியமை அனைவரும் அறிந்ததே.

பல ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த திருக்கேதீச்சர சுற்றாடலை திட்டமிட்டு அசிங்கப்படுத்தும் முயற்சி கடந்த சில வருடங்களாக தொடருகிறது. இவ்விடயம் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுத்து திருக்கேதீச்சர சிறப்பை காக்குமாறு வேண்டுகிறோம்.

சுதேசிய மதமாகிய சைவ சமயத்தை மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்து இழிவுபடுத்தும் செயல் முற்றுப் பெறுவதற்கு வழி செய்ய வேண்டும். சைவ மக்கள் என்றும் மத விவகாரத்தில் பகையை வளர்க்க விரும்பவில்லை. எனினும் திட்டமிட்டுச் செயற்படும் இத்தகைய செயற்பாடுகள் சமய மோதல்களை உருவாக்கும்.

போர்ச் சூழலைப் பயன்படுத்தி பல ஏழை சைவச் சிறுவர்களை கடந்த காலங்களில் கிறிஸ்தவ மதக் குழுக்கள் மதம் மாற்றியமையை யாவரும் அறிந்ததே.

கிழக்கில் பல சைவக் குடும்பங்களை இஸ்லாமிய மதத்தவர்கள் தினமும் மதம் மாற்றிய வண்ணம் உள்ளனர்.

இச் சூழ்நிலையில் சைவ மக்கள் மிகுந்த அதிர்ச்சியோடு எதிர்காலம் என்னவாகுமோ என்ற கேள்வியோடு வாழ்கிறார்கள்.

இவ்விடயம் தொடர்பாக தாங்கள் உடன் கவனம் செலுத்தி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என நன்றியோடு வேண்டிக் கொள்கிறோம் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## இம்முறை ஜெனிவாவுக்கு

# பீரிஸ், அலி சப்ரி உள்ளிட்ட குழுவினர் பயணம்

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத் தொடர் இம்மாத இறுதியில் ஆரம்பமாக உள்ள நிலையில் இலங்கை குழு சார்பில் அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், அலி சப்ரி உள்ளிட்ட வர்கள் பயணமாக உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி)

# 40 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருளை வழங்கியது இந்தியா



(கொழும்பு)

இந்திய நிறுவனமான ஐ.ஓ.சியால் வழங்கப்பட்ட 40,000 மெற்றிக் தொன் எரிபொருளை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவிடம் கையளித்தார்.

இது குறித்து டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ள இந்தியத் தூதரகம், இந்தியா இலங்கையின் அர்ப்பணிப்புள்ள பங்காளி மற்றும் உண்மையான நண்பனாக செயற்படும் எனக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்கான இந்திய-இலங்கை ஒத்துழைப்பு தொடரும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்; விடுவிக்குமாறு கோரி மைத்திரி மனு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான குற்றச்சாட்டில் இருந்து அவரை விடுவிக்குமாறு கோரியே குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் மீது வெளிப்படையாக விமர்சனத்தை முன்வைத்து வந்தார்.

குறித்த தாக்குதல் சம்பவத்திற்கு பொறுப்பு கூற வேண்டிய சிறிசேனவை அரசாங்கம் காப்பாற்றுகின்றதா என ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் கேள்வியெழுப்பியுள்ளனர்.

அத்தோடு, ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், கொழும்பு பேராயரும், முன்னாள் ஜனாதிபதியை விசாரிக்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பீம்ஸ்ரெக் உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு மோடிக்கு அழைப்பு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் இலங்கையில் இடம்பெறும் பீம்ஸ்ரெக் உச்சி மாநாட்டில் பங்கேற்க பயணம் செய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், மோடி இந்தியாவில் இருந்து நேரடியாகவே விமானம் மூலம் பலாலிக்கு செல்ல திட்டமிடுவதான செய்திகள் வெளிவந்துள்ளன.

பீம்ஸ்ரெக் உச்சி மாநாட்டில் பங்கேற்க வருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தியப் பிரதமருக்கு அழைப்பு விடுத்திருந்தாலும், பிரதமர் மோடியின் இந்தப்பயணம் குறித்து இந்தியத்தரப்பு இதுவரை அதிகாரபூர்வ அறிவிப்புக்களை வெளியிடவில்லை.

எனினும் அவர் இலங்கைக்கு பயணம் செய்யக்கூடும் என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் நரேந்திர மோடி இந்தியாவில் இருந்து நேரடியாகவே விமானம் மூலம் பலாலிக்கு முதலில் சென்று அங்கு இந்திய உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட தமிழ் கலாசார நிலையத்தை திறந்து வைத்த பின்னர் தான் அங்கிருந்து கொழும்புக்கு செல்வதற்கு இந்திய அதிகாரிகள் திட்டமிடுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

வடபகுதி மீது சீன இராஜதந்திரிகள் அண்மைக்காலமாக கரிசனை கொண்டுள்ள நிலையில், இவ்வாறான ஒரு நகர்வின் மூலம் இந்தியா ஒரு செய்தியை இலங்கைக்கு வழங்க விரும்புவதாக கூறப்படும் போதிலும் இந்த நகர்வுகள் குறித்த இந்தியத்தரப்பு அதிகாரபூர்வ அறிவிப்புக்களை வெளியிடவில்லை.

இதற்கிடையே மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு நேரத்தை ஒதுக்கித்தருமாறு இந்தியத்தரப்பிடம் கோரியுள்ளதாக அதன் தலைவர் இரா. சம்பந்தனும் தெரிவித்தார்.

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளுக்குரிய தீர்வு குறித்து தமிழ் கட்சிகள் இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பியிருந்த நிலையில் அவர் பேச்சுக்களுக்கான நேரத்தை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனிந்து ஹசரங்கவிற்கு கொரோனா தொற்று

இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்துவீச்சு சகலதுறை வீரரான வனிந்து ஹசரங்கவிற்கு, கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இருபது-20 தொடரில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலியா சென்றுள்ள நிலையில், அவருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக வேகப்பந்து வீச்சாளர் பினுர பெனார்டோ கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டார். (4)



Srilanka Weight Lifting Federation ஆல் நடத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான பளுதூக்கல் போட்டியில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 42 ஆவது அணி சார்பாக பங்குபற்றி இரண்டு மாணவிகள் இரண்டாவது இடத்தினை பெற்றுள்ளனர்.87kg பிரிவில் ஜீவமலர் இரண்டாம் இடத்தினையும், 71kg பிரிவில் திவ்வியா இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டார்கள். யாழ்.பல்கலைக்கழகத்திற்கு பெருமை சேர்த்த மாணவிகள் இருவருக்கும் பலரும் பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர்.

(படங்கள்- கஜிந்தன்)

# இலங்கை அணிக்கு அபராதம்



சிட்னியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது இருபது - 20 போட்டியில், உரிய நேரத்தில் ஓவர்களை வீசத் தவறியதற்காக அனைத்து இலங்கை வீரர்களுக்கும் போட்டிக் கட்டணத்தில் 20 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

போட்டி நடுவராக இருந்த டேவிட் பூன், தசுன் ஷனக மற்றும் அவரது குழுவினருக்கு ஒதுக்கப்பட்ட 20 ஓவர்களுக்கான நேரத்தை விட மேலதிகமான நேரத்தை எடுத்துக் கொண்ட காரணத்திற்காக அபராதம் விதிக்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

சர்வதேச கிரிக்கெட் நிர்வாக வீரர்கள் மற்றும் ஆதரவுப் பணியாளர்களுக்கான நடத்தை விதியின் பிரிவு 2.22ன் படி, நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் பந்து வீசத் தவறிய ஒவ்வொரு ஓவருக்கும் அவர்களின் போட்டிக் கட்டணத்தில் 20% வரை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், போட்டியின் போது தகாத வார்த்தைகளை பயன்படுத்தியதாக இலங்கை அணியின் தொடக்க ஆட்டக்காரர் பத்தும் நிசாங்கவை போட்டி நடுவர் எச்சரித்துள்ளார்.

அவரது தனிப்பட்ட ஒழுக்காற்று கணக்கிற்கு பெனால்டி மதிப்பெண் வழங்கவும் போட்டி நடுவர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அணியின் தலைவர் தசுன் ஷனக்க மற்றும் பாத்தும் நிஸ்ஸங்க ஆகியோர் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகள் இன்றி விசாரணையை நிறைவு செய்வதாகவும் சர்வதேச கிரிக்கெட் நிர்வாகம் தெரிவித்துள்ளது. (4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2513

Search for people, places and things

### பிரியங்கா

இந்த உலகத்தில 2 பேரை ரொம்ப நேரம் முறைச்சு பார்க்க முடியாது



முதலாவது சூரியன்
இரண்டாவது மனைவி..

### நிசங்கன்



மனுசனா பொறந்தா எதையாச்சும் சாதிக்கனும்டா



நல்லவேளை நான் குழந்தையா தான் பொறந்தேன்

### யாமினி

பைக்கில் 35 கி.மீ வேகத்தில் பயணித்து சொகுசு கண்டவர் ஒரு போதும்



வேகமாக போக மாட்டார்
(பைக்கில் மெதுவாக போவது கோழைத்தனம் இல்லை. புத்திசாலி தனம்)

### திலக்ஷன்

காது கிட்ட வந்து முணுமுணுக்காதேடா கெட்ட பழக்கம் என்னன்னு சத்தமா சொல்லு



காபி குடிக்கிறீங்களான்னு அவர் கிட்ட கேட்டுத் தொலைக்க வேணாமாம் வீட்டுல பால் கிடையாதாம் அம்மா சொல்ல சொன்னாங்க

### தர்ஷனா




கல்யாணம் முடிஞ்ச பிறகு ஏன் எங்கேயும் கூட்டிற்று போக மாட்றீங்க




தேர்தல் முடிஞ்ச அப்புறம் எவனாவது பிரச்சாரத்துக்கு போவானா

### பவன்

கல்யாணத்துக்கும் ஜல்லிக்கட்டுக்கும் என்ன ஒரு ஒற்றுமைனா



வளர்த்தவன் எஸ்கேப் ஆகிடுவான் அடக்க வாரவன் மாட்டிக்குவான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யா/வடமராட்சி துன்னாலை அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் தீர்த்தோற்சவ சிறப்பிதழ் - 16.02.2022

## அவதாரமாய் அவதரித்து அருளாட்சி செய்கின்ற அச்சுதனே அவதார புருஷனே வணங்குகிறோம் உன் அடியை



சரித்திர பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமியின் கொடியேற்றம் கடந்த 01.02.2022 அன்று ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத்திருவிழாக்களில் முக்கியமானதும் சிறப்பாகவும் விளங்குவது சமுத்திரத் தீர்த்தத்திருவிழா ஆகும்.

சரித்திர வரலாற்று ரீதியான இத்திருவிழாவுக்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பெரும் திரளான மக்கள் கூடுவார்கள். இத்திருவிழா இன்று நடைபெறுகின்றது. இன்று மாலை எம்பெருமான் கற்கோவளம் கடற்கரைக்கு தீர்த்தமாடுவதற்கு செல்வார்.

பக்தர்கள் சூழ்ந்திருக்க மாயவன் சக்கரத்தை கற்கோவளம் பக்தர்கள் தோளிலே காவிக்கொண்டு சங்கு, சக்கரம், மாயவா, கேசவா, வைகுந்தா நாராயணா, கண்ணா கோவிந்த மலையைக் கையிலே கொண்டு கற்கோவளத்தில் மச்சவதாரம் என கோஷங்கள் எழுப்பியவாறு காவிச் செல்வார்கள். கற்கோவளம் கடலில் சந்திரன் உதயமாகும் போது மாயவனின் சமுத்திரத்தீர்த்தம் நடைபெறும்.

"ஆழியெழ சங்கும் வில்லுமெழ திசை
வாழியெழ தண்டும் வாளுமெழ அண்டம்
மோழையெழ முடியாதமெழ அப்பன்
ஊழியெழ உலகம் கொண்டவாறே"

-ஸ்ரீ நம்மாழ்வார் திருவாய்மொழி

சங்கு, சக்கரம், வில்லு, தண்டாயுதம், வாள் ஆகிய ஐந்தும் எம்பெருமான் ஸ்ரீ மகா விஷ்ணுவின் பிரதான ஆயுதங்களாகும். இவற்றைப் பஞ்சாயுதம் என்றும் கொள்வர். அண்ட சராசரங்களையும் காத்து அருள்புரியும் எம்பெருமான் அவற்றை இந்த ஐந்து ஆயுதங்களின் மூலமே செய்வதாக புராணங்கள் கூறும். பஞ்சா யுதங்களுள் முதன்மையானது "ஆழி அல்லது சக்கரம்" ஆகும். இதனை சுதர்சனம் என்றும் அழைப்பர்.

இது பகவானது வலது கையில் இருப்பதால் மகாவீரம் வாய்ந்ததாகும். எதிரிகளை தயவு தாட்சண்யமின்றி அழிப்பதால் "ருக்ரம்" வாய்ந்ததாகும். இவர் பகவானுடைய கட்டளைகளைக்காக காத்திருந்து நித்யசேவை புரிவதால் "சக்கரத்தாழ்வார்" என்றும் போற்றப்படுகின்றார். இவரை வணங்குவதால் எதிரிகள் தோற்கடிக்கப்படுவதுடன் பேய், பிசாசு, பில்லி, சூனியம், நோய் நொடிகளும் விலகி விடுகின்றன.

பகவானது ருத்ர அவதாரமானது நரசிம்மத்தின் அம்சமே சுதர்சனம் என்றும் கொள்வர். பகவான் துஷ்டர்களை அழிப்பதற்கும் பக்தர்களைக் காப்பதற்கும் யுகம் தோறும் அவதரிப்பதுடன் பக்தர்களுக்கு நித்ய அனுக்கிரகம் செய்வதற்காக இப்பூவுலகின் பல்வேறு பாகங்களிலும் அச்சாவதார மூர்த்தியாய் தோன்றி அருள் பாலிக்கின்றார். அவ்வாறு தோன்றிய திவ்ய சேத்திரம் தான் ஈழத்தின் ஸ்ரீ வல்லிபுரம் ஆகும்.

வல்லிபுரத்தில் கோயில் கொண்டபடியினால் வல்லிபுரநாதன் எனவும் பெயர் வழங்கப்படுகின்றது. பகவானை முழுமையான திவ்ய சொரூபத்தில் வணங்குவதற்கு பல கடுமையான சாஸ்திர சம்பிரதாயங்கள் இருப்பதால் மிக இலகுவாக எளிமையான பக்தி சேவையினால் இறைவனைத் துதிப்பதற்கு அவர்களது ஆயுத வழிபாடு துணை புரிகின்றது.

எமது வல்லிபுரத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வாழும் சகல மக்களின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் மாயவரின் ஆழித்தீர்த்தம் இன்று நடைபெறுவது இன்றைய நாளின் சிறப்பம்சமாகும். நாம் அனைவரும் பக்தி சிரத்தையுடன் பங்குகொண்டு வல்லிபுர நாதனின் திருவருள் பெறுவோமாக.

சாமஸ்ரீ தேசமானிய Lion த.ஜெயரூபன், சமாதான நீதவான்
கணக்காய்வாளரும் வருமானவரி ஆலோசகரும் மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பு மற்றும் அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் உறுப்பினர், சமூக சேவையாளர்,
கற்கோவளம்.

## பிரதம குருமார்களின் நல்லருளாசிகள்



கொடியேற்றம்
(01.02.2022)
இரதோற்சவம்
(15.02.2022)
சமுத்திர தீர்த்தம்
(16.02.2022)
கொடியிறக்கம்
(17.02.2022)



மாயவன் மெய்யன்பர்களே!

அன்புடையீர், எம்பெருமான் ஸ்ரீவல்லிபுரம் சக்கரரூப மாயவனின் பிலவ வருடத்திற்கான மஹோற்சவத்தின் மிகவும் புனிதம் வாய்ந்த (16.02.2022) மாசி 04ம் நாள் இன்று புதன்கிழமை பூரணை தினத்தில் சமுத்திர தீர்த்தம் நடைபெறுவது பலகோடி புண்ணியங்கள் மாந்தர்களுக்கு கிடைக்கும் அருள் வாய்ந்த தினம் என்றால் மிகை யாகாது. காத்தற் கடவுளான சக்கர மாயவனின் சமுத்திர தீர்த்தத்தில் நீங்கள், நாங்கள் யாவரும் பங்கு கொண்டு கலந்து பேரருள் பெற்று நீடூழி நீடித்து வாழ எல்லாம் வல்ல மாயவனைப் பிரார்த்தித்து அவன் திருவருள் வேண்டி பணிந்து அன்பர்க்கும் நல்லருள் நிறைந்த ஆசிகள் கூறி வாழ்த்தி வணங்குகிறோம். நீங்கள் அனைவரும் சுபீட்சம் நிறைந்த நல்வாழ்வு பெற எமது நல்லாசி வாழ்த்துக்களை மிக்க மகிழ்வுடன் கூறிக் கொள்கின்றோம்.

நன்றி துபம்

மாயவனின் நிழலில் பிரம்மஸ்ரீ.ச.க.சுதர்சனக்குரு (கேபி.) பிரதமகுரு பிரம்மஸ்ரீ.சுதர்சன கணபதீஸ்வரக்குருக்களும் பிரதம குருவும் மஹோற்சவக் குருவும்

## உயர்வரமளிப்பாய் தேவே

அலைமேவும் கடலில் ஆவலொடு நீராடும்
ஆயர்குலக் கண்ணா ஆழ்கடல் வண்ணா
தலையாய துன்ப துயரங்கள் நீங்க
தாவிலாவுன் அழகனைத் தொழுது வணங்கி
குலையாத அழகோடு பொலிவான பந்தற்கீழ்
கூடிப் பணிவோர் குறைகளையும் கோபாலா
கலைமேவும் கற்கோ வளநகர் மக்கள்
காரியம் யாவினும் கைகொடுக்கும் கண்ணா
உளையாத வாழ்வுபெற் றுயரும் வண்ணா
ஊக்கமது தந்து உயர்வர மளிப்பாய் தேவே.

கலாபூஷணம் மு.தணிகாசலம், கற்கோவளம்.

(C-3787)


சிறீரங்கம்
ரெக்ஸ் ரைஸ்ஸ்
பிரதான வீதி, நெல்லியடி,
NTB வங்கிக்கு அருகில்
கிளை-1 வதிரி வீதி, உடுப்பிட்டி.

விக்னேஸ்வரா
திருமண மண்டபம்
Room, Hall A/C Facility
Conferene Hall With 200 Seating Capacity
யாழ்.பிரதான வீதி, வல்வை.
தொ.பே: 021 226 1567



அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
சரவணை மகாலட்சுமி தங்கமாடம்
இல.93,பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே: 021 321 4577



தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு
தரன் நகை மாளிகை
ம.ம.வி.வீதி, நெல்லியடி
தொ.பே: 021 321 9254
கிளை
தரன் நகை மாளிகை
பிரதான வீதி,
பருத்தித்துறை.



தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு நாட வேண்டிய இடம்
வைஷ்ணவி நகைப்பூங்கா
பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே:- 021 226 4519



நவீன வடிவமைப்புக்களில்
தரமான 22 கரட் நகைகளுக்கு
நாட வேண்டிய இடம்
சுசீலா
ஆபரண மாளிகை
இல.258, பிரதான வீதி,
பருத்தித்துறை.
தொ.பே: 021 22[illegible] 3064
நியூ சுசீலா ஆபரண மாளிகை
இல.228, பிரதான வீதி, பருத்தித்துறை.



நவீன வடிவமைப்புக்களில்
தரமான 22 கரட் நகைகளுக்கு
நாட வேண்டிய இடம்
சிறீ சுசீலா
நகை மாளிகை
239, பிரதான வீதி, பருத்தித்துறை.
தொ.பே:- 021 226 1003


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம்-கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழா நேற்று காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படங்கள் : ஐ.சிவசாந்தன்)



வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவத்தின் சப்பறத்திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. (படம் : மகாலிங்கம்)

# குடிநீருக்காக போராடிய மக்கள் தண்ணீர் வழங்கியது இராணுவம்



(அராலி)

மிக நீண்ட காலமாக குடிநீர் பிரச்சினையால் அவதியுற்ற மக்களுக்கு இராணுவத்தினர் குடிநீர் வசதியை வழங்குவதாக உறுதி அளித்ததுடன் அதனை நடைமுறைப்படுத்தியும் உள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கல்லுண்டாய் குடியேற்றத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான குடிநீர் வசதிகளை மானிப்பாய் பிரதேசசபை மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் என்பன சீரான முறையில் வழங்கவில்லை.

குறித்த தண்ணீர் பிரச்சினையையும் ஏனைய அடிப்படை பிரச்சினைகளையும் சுட்டிக்காட்டி அப்பகுதி மக்கள் பலமுறை போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இருப்பினும் அவர்களது கோரிக்கைகளுக்கு தகுந்த தீர்வு இதுவரை எட்டப்படாமையால் அவர்கள் நேற்று தமது குடியேற்றத் திட்டத்துக்கு முன்பாக வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து குறித்த பகுதிக்கு வருகை தந்த இராணுவத்தினர் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத்திற்கு விடயத்தை தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து குறித்த பகுதி மக்களுக்கு தேவையான குடிநீரை வழங்குமாறு அவர் பணித்திருந்தார். போராட்டம் ஆரம்பித்து சுமார் ஒரு மணி நேரத்திற்குள் இராணுவத்தினருடைய தண்ணீர் வாகனம் அவ்விடத்திற்கு வந்து மக்களுக்கு தேவையான குடிநீரை வழங்கியது. (5-4-104)



## சிலை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மக்கள் கலைஞர் அமைப்பினால் அமைக்கப்பெற்ற கலாநிதி நடிகமணி வி.வி.வைரமுத்து வின் சிலை திறப்பு விழா இன்று 16 ஆம் திகதி புதன் கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறும்.

அமைப்பின் தலைவர் மனோகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினர்களாக வலி.வடக்கு பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, நடேஸ்வரக் கல்லூரி அதிபர் கு.விமலன், நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலய அதிபர் வசந்தராணி சுதர்சன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவர். (5-4)



விதையனைத்தும் விருட்சமே இளைஞரணியின் ஏற்பாட்டில் 24 ஆவது இரத்ததான முகாம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்.போதனா மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவில் நடைபெற்றது. (படம் : ரவிசாந்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 220 | 280 |
| உருளைக்கிழங்கு | 160 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 550 | 600 | 600 | 600 |
| தக்காளி | 260 | 220 | 240 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 90 | 50 |
| கோவா | 180 | 180 | 200 | 200 |
| கரட் | 350 | 550 | 550 | 600 |
| பூசணி | 140 | 140 | 140 | 200 |
| புடோல் | 160 | 220 | 180 | 240 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 200 |
| பாகற்காய் | 250 | 250 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 240 | 260 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 120 | 120 |
| பயற்றங்காய் | 250 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 160 | 200 | 200 | 250 |
| பீற்றூட் | 250 | 250 | 300 | 300 |
| கறிமிளகாய் | 550 | 450 | 550 | 500 |
| முருங்கைக்காய் | - | - | 1000 | 1200 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | - | 250 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 80 | 100 |
| தேசிக்காய் | 120 | 150 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 40-75 | 60-80 |
| இராசவள்ளி | - | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 120 | 180 | 200 |
| முள்ளங்கி | 140 | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 20 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | - | 80 | 150 |

## எறிபத்த நாயனார் குருபூஜை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் "வாராந்தச் சொற்பொழிவும் - மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்" இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் "எறிபத்த நாயனார்" குருபூஜை நிகழ்வு, நெடுங்குளம் அம்பலவாணர் அறநெறிப் பாடசாலையில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு குருபூசை இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து, "எறிபத்த நாயனாரின் பக்தி நெறி" எனும் தொனிப்பொருளில் சைவப்புலவர் திருவருள்வாசகர் கா.கமலநாதனின் சொற்பொழிவு இடம்பெறும்.(5-4)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள Zoom செயலி ஊடான இலவச வகுப்புக்கள் "சிகரம் தொடு" எனும் நிகழ்ச் சித்திட்டத்தின் கீழ் இடம்பெற்று வரும் மொழிப்பயிற்சி வகுப்புக்கள் மற்றும் போட்டிப் பயிற்சி வகுப்புக்கள் தொடர்பான கலந்துரையாடலை செவ்வாய்க்கிழமை புதன்கிழமை, வியாழக் கிழமைகளில் எமது அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த கலந்துரையாடலில் இது வரை பங்குபற்றாதவர்கள் தவறாது இக்கலந்துரையாடல்களின் பங்குபற்றுமாறு வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் அறியத் தந்துள்ளார். (5)

## மணல் திருட்டு

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட முள்ளிக்குளம் பகுதியில் தனியார் ஒருவர் வீடு கட்டுவதற்காக பறிக்கப்பட்ட 2 லோட் மணல் களவாடப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக உரிமையாளரால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (5-4-60)

## கவிதைத் தொகுப்பு அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 120 ஆவது நூல் வெளியீடான கவிஞர் சி.கிருஸ்ணப்பிரியனின் மூதன்னையின் பாடல் கவிதைத் தொகுப்பு அறிமுக நிகழ்வு இன்று புதன் கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். (5-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீரென அதிகரிக்கும் கொவிட் மரணங்கள்

## சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் கொவிட் நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுவதாகவும், இதனை சாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டாம் எனவும் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.**

கொவிட் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் முதியவர்கள் என அவர் தெரிவித்தார்.

கொவிட் வைரஸால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானவர்கள் அறிகுறியற்றவர்களாக இருப்பதால் தங்கள் வீடுகளில் உள்ள வயதானவர்களுக்கு வைரஸைக் கொண்டு செல்லும் போக்கு இருப்பதாகவும், நாட்பட்ட நோயாளிகள் மற்றும் வயதானவர்கள் வைரஸால் இறப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றும் அவர் தெரிவித்தார்.

சமூகத்தில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. முழுமையாகத் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத நபர்கள் உடனடியாக தடுப்பூசி செலுத்திக் கொண்டால் மரணத்தை தடுக்க முடியும் என அவர் குறிப்பிட்டார். (ஙி)

# அத்தியாவசியப் பொருட்களை தட்டுப்பாடு இன்றி வழங்கத் தயார்

## பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களைத் தட்டுப்பாடு இன்றி வழங்கத் தயார் என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவால் இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.

பால்மா, எரிவாயு, கோதுமை மா, சீமெந்து போன்றவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள போதிலும், ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் போதுமான அளவு இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்கள் சந் தைக்கு தட்டுப்பாடு இன்றி வழங்கப்ப டுவதை உறுதி செய்வதற்குத் தேவை யான தீர்வுகளை வழங்க ஜனாதிபதியினால் குறித்த குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஙி)

# பதவி விலகினார் ரூபவாஹினி கூட்டுத்தாபன பணிப்பாளர்

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் ஜயம்பதி ஹீன் கெந்த பதவி விலகியுள்ளார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக நிர்வாக சேவையில் உயர் அதிகாரி ஒருவரை நியமிப்பது குறித்து பரிசீலனையில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஙி)

# விமர்சனக் குரல்களை மௌனமாக்குவது ஜனநாயகத்தை கேள்விக்குள்ளாக்கும் செயல்

## ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர்

(கொழும்பு)



விமர்சனக் குரல்களை மௌனமாக்குவது பொது விவாதம், சுதந்திரம் மற்றும் அனைவரின் மனித உரிமைகளையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சமுதித சமரவிக்ரம வீட்டின் மீது நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலின் பின்னணியில் இவ்வாறான கருத்தை ஹனா சிங்கர் தனது டுவிட்டரில் வெளியிட்டுள்ளார்.

ஜனநாயகத்தை உறுதி செய்வதில் ஊடகவியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் காத்திரமான பங்கை வகிக்கிறார்கள். கருத்து சுதந்திரம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதி செய்வதற்கு அவர்களின் பாதுகாப்பு மிக முக்கியமானது எனவும் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் குறிப்பிட்டுள்ளார். (ஙி)

# சுகாதார ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

சுகாதாரத் தொழிற்சங்கத்தினரின் பணிப்பகிஷ்கரிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இந்த பணிப்பகிஷ்கரிப்பானது 14 நாட்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மருத்துவ ஆய்வுகூட நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார். (ஙி)

# மூன்று தடுப்பூசிகளும் பெற்றிருந்தால் மட்டுமே கச்சதீவு திருவிழாவிற்கு செல்ல முடியும்

## அரச அதிபர் மகேசன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)



எதிர்வரும் மாதம் இடம் பெறவுள்ள கச்சதீவுத் திருவிழா வில் பங்கு கொள்ளும் பக்தர்க ளின் எண்ணிக்கை 500 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத் துடன் அங்கு செல்வோர் கட்டா யம் தடுப்பூசிகளை பெற்றிருக்க வேண்டும் என யாழ்.அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

கச்சதீவு திருவிழா தொடர் பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கச்சதீவு தேவாலய உற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பக்தர்களை பொறுத்தவரை யில் கொரோனா சுகாதார நடை முறைகளை கருத்தில் கொண்டு உள்ளூர் பக்தர்கள் 500 பேர் கலந்து கொள்ளலாம் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்திய பக்தர்களும் கலந்து கொள்வதற்கு அனுமதி கோரப் பட்டிருந்தது. அந்த வேண்டுகோள் முறைப்படி உரிய மட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கலாசார அமைச்சுடன் தொடர்பு கொண்ட போது நாம் ஏற்கனவே தீர்மானித்ததன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கும்படி எமக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இந்திய பக்தர் பற்றி எந்தவிதமான இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை.

500 பக்தர்களுடன் உற்சவத்தை நடத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

கலந்து கொள்பவர்கள் பூஸ் டர் டோஸ் உட்பட கொரோனாத் தடுப்பூசி மூன்று டோஸும் பெற்று இருக்க வேண்டும். அதற் குரிய ஆதாரத்தை தம்வசம் வைத்திருக்க வேண்டும்.

தமது பெயர் விபரம், செல்ல உள்ள படகு இலக்கம் உட்பட பதிவு செய்து தெளிவாக விண் ணப்பிக்கும் போது அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதனை அந்த அந்த பங்கிற்குரிய குருவானவருடன் கலந்துரையாடி எடுக்க வேண்டும்.

அதுபற்றிய அறிவிப்பு பேரா யர் ஊடாக அறிவிக்கப்படும்.

உற்சவம் தவிர வியாபார சேவைகள், இதர செயற்பாடுகள் போன்றன தடை செய்யப்பட்டுள்ளன.

மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் சுகாதார நடைமுறையுடன் இறுக்கமான கண்காணிப்பு நடவடிக்கையுடன் இந்த உற்சவம் நடைபெறவுள்ளது எனத் தெரிவித்தார். (5-4-33)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா: சூரி 8 செவ் 11 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: போன் கடை (சொந்தம்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் அல்லது உத்தியோகம்<br>தொ.இ: B/12291 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: சூரி 8 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: தாதி/ பிரான்ஸ் குடியுரிமை<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/8505 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 37 சூரி , செவ் 1 இல் உயரம்:5'9"<br>தகைமை/தொழில்: IDM Diploma fair First Insurance Company<br>எதிர்பார்ப்பு : உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: B/12292 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 27 ¼ சூரி , செவ் 3 இல்<br>உயரம்: 4' 11"<br>தகைமை/தொழில்: O/L/சி.கூ.க.ச/ கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில்<br>தொ.இ:G/8511 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா : 17 சூரி, செவ் 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12293 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 33 சூரி 2 செவ் 1 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:B.COM/ கனடா<br>எதிர்பார்ப்பு: கனடா அல்லது யாழ்ப்பாணம் ஆங்கிலம் தெரிந்த தொழில் புரிபவர்<br>தொ.இ:G/8549 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: சூரி 6 செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L Diploma Computer (பிரான்ஸ்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12294 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா: சூரி 11 செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:MBM, B.Tec<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச தொழில்<br>தொ.இ:G/8554 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உக்ரேய்னிய அகதிகளை ஏற்றுக்கொள்ள தயாராகும் போலந்து

(கீவ்)

உக்ரேய்ன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தினால், உக்ரேய்னிய அகதிகளை ஏற்றுக்கொள்ள எல்லையில் இருக்கும் மிகப்பெரிய ஐரோப்பிய ஒன்றிய நாடான போலந்து தயாராகி வருகிறது.

உக்ரேய்னுடன் எல்லைகளைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளில் இதேபோன்ற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. (நி)

## பட்டினியால் ஆப்கானில் இதுவரை 12 குழந்தைகள் பலி

(காபூல்)


ஆப்கானிஸ்தானில் பட்டினியால் இதுவரை 12 குழந்தைகள் வரை உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டில் வந்த பிறகு அந்நாடு சர்வதேச தடைகள், வெளிநாட்டு உதவி நிறுத்தம் ஆகிய கடும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியது.

இந்நிலையில், அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், ஆப்கானிஸ்தானில் 10 இலட்சம் குழந்தைகள் உணவின்றி உயிரிழக்கும் அபாயம் நீடிப்பதாக ஐ.நா. குழந்தைகள் நிதியம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

எனினும், குண்டூஸ் மாகாணத்தில் இந்த ஆண்டு தொடக்கம் முதல் இதுவரை ஊட்டச்சத்து குறைபாட்டால் 12 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு பொது சுகாதாரத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

## பிரான்சின் தென்பகுதியில் தீ விபத்து
## 2 குழந்தைகள் உட்பட 7 பேர் பலி



(பாரிஸ்)

பிரான்சின் தென் பகுதியில் உள்ள மளிகைப் பொருட்கள் விற்பனையக கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 2 குழந்தைகள் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தீ விபத்தில் இருவரை காணவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரான்சின் பைரெனிஸ் ஓரியென்டெல்ஸ் என்ற இடத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. இரண்டு மாடி கட்டடத்தின் தரைத் தளத்தில் திடீரென வெடிப்பு ஏற்பட்டு தீ பரவி அருகில் உள்ள கட்டடங்களுக்கும் பரவியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தீ விபத்தில் 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். வெடிப்புக்கான காரணம் என்ன என்பது இதுவரை தெரியவில்லை. (நி)

## 50 ஆண்டுகளின் பின் கனடாவில் அவசரகாலநிலை பிரகடனம்



(ஒட்டாவா)

பாரவூர்தி சாரதிகளுக்கு தடுப்பூசி கட்டாயம் என்றும் தடுப்பூசி போடாதவர்கள் ஒரு வாரம் தனிமைப்படுத்தப்படுவார்கள் என்றும் கனடா அரசாங்கம் உத்தரவிட்டமைக்கு பாரவூர்தி சாரதிகள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டத்தை ஒடுக்கும் விதமாக நாடு முழுவதும் அவசரநிலை சட்டத்தை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

1970 ஆம் ஆண்டுக்கு பிறகு கனடாவில் அவசர நிலை சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

போராட்டக்காரர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு அவர்களது பாரவூர்திகள் பறிமுதல் செய்யவும் போராட்டக்காரர்களால் போக்குவரத்து முடக்கி வைக்கப்பட்டுள்ள பாலங்களை உடனடியாக திறக்கவும் பிரதமர் ட்ரூடோ உத்தரவிட்டுள்ளார்.

போராட்டம் ஒன்றுக்காக கனடாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும்.

அமெரிக்காவில் இருந்து வருவோருக்கு கூடுதல் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பாரவூர்தி சாரதிகளுக்கு தடுப்பூசி கட்டாயம். தடுப்பூசி போடாதவர்கள் ஒரு வாரம் தனிமைப்படுத்தப்படுவார்கள் என அரசு உத்தரவிட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாரவூர்தி சாரதிகள், தலைநகர் ஒட்டாவாவில் உள்ள முக்கிய சாலைகளில் பாரவூர்திகளை நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டது. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஒட்டாவா பாலத்தைப் போராட்டக்காரர்கள் முடக்கியதால் அமெரிக்கா - கனடா இடையிலான வர்த்தகம் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், போராட்டத்தை ஒடுக்கும் விதமாக நாடு முழுவதும் அவசரநிலை சட்டத்தை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார். (நி)

## கமிலாவுக்கு கொரோனா



(லண்டன்)

பிரிட்டன் இளவரசர் சாள்ஸின் மனைவி கமிலா கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. 74 வயதான அவர் தற்போது சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

அரியணையின் வாரிசான இளவரசர் சாள்ஸ் இரண்டாவது முறையாக கொரோனா தொற்றுக்கு நேர்மறை சோதனை செய்த பல நாட்களுக்குப் பிறகு இந்த செய்தி வந்துள்ளது.

இரண்டு அரச குடும்பத்தாருக்கும் வைரஸ் நோய்க்கு எதிராக முழுமையாக தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இரண்டாவது முறையாக தொற்று நோயால் பாதிக்கப்பட்ட 73 வயதான இளவரசர் சாள்ஸ், கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்படுவதற்கு பல நாட்களுக்கு முன்பு தனது தாயை சந்தித்து அவருடன் நேரடித் தொடர்பில் இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

எவ்வாறெனினும் அரச குடும்ப உறுப்பினர்கள் இருவரும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமையினால் எலிசபெத் மகாராணியின் உடல் நிலை குறித்த கவலைகள் எழுந்துள்ளன. (நி)

## உக்ரேய்ன்- ரஷ்யா இடையே அதிகரிக்கும் போர்ப்பதற்றம்!
## இந்தியர்களை வெளியேறுமாறு தூதரகம் அறிவிப்பு

(கீவ்)

உக்ரேய்னில் போர்ப்பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், அங்குள்ள இந்தியர்களை உடனடியாக வெளியேறுமாறு இந்தியத் தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து இந்தியத் தூதரகம் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"உக்ரேய்னில் போர்ப்பதற்றம் நிலவுவதால் அங்கிருக்கும் இந்தியர்கள், குறிப்பாக அத்தியாவசிய தேவைகளுக்கு தங்கியிருக்கும் மாணவர்கள் உள்ளிட்டோர் உடனடியாக நாடு திரும்புமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் பதற்றம் தனியும் வரை உக்ரேய்னுக்கான பயணத்தை தவிர்க்குமாறு இந்தியர்களிடம் கேட்டுக்கொள்கிறோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்களுக்கிடையே சமநிலையை பேண முயற்சிக்க வேண்டும்- அங்கஜன்



(யாழ்ப்பாணம்)

மதங்களுக்கிடேயே விரிசல்களை ஏற்படுத்தாமல் சமநிலையைப் பேண முயற்சிக்க வேண்டும் என அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க தலமான திருக்கேதீஸ்வர ஆலய நுழைவாயில் பகுதியில் கிறிஸ்தவ சொரூபம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருக்கேதீஸ்வர ஆலய நுழைவாயில் பகுதியில் மிகப் பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ சொரூபம் இந்து-கிறிஸ்தவ மக்கள் மத்தியில் விரிசலை ஏற்படுத்த காரணமாக அமைந்து விட்டது.

சமூகத்தின் ஒற்றுமையை சீர் குலைக்க விரும்பும் ஒருசிலரின் செயற்பாடு காரணமாக ஒட்டுமொத்த சமூகத்தினதும் ஒற்றுமை கேள்விக்குட்படுத்தப்படுகிறது. சமூகத்தின் ஒற்றுமையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சகலருக்கும் உண்டு. எனவே இவ்விடயத்தில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்

ஒரு தலத்தின் தனித்துவத்தை பாதிக்கும் வகையில் மற்றொரு மத ஸ்தானம் அமைப்பதற்கு அதிகாரிகள் அனுமதி அளிக்கக்கூடாது. அனுமதி இன்றி இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றால் உரிய சட்ட அணுகல் மூலம் பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும். அதை விடுத்து மதங்களுக்கிடையே முறுகல் நிலையை ஏற்படுத்தி வேடிக்கை பார்ப்பதனை அனுமதிக்க முடியாது என தெரிவித்தார். (4-5-30-33-104)

# சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள குமாரசுவாமிபுரம் பகுதியில் தற்போது என்றுமில்லாதவாறு சட்டவிரோத கசிப்பு விற்பனை உற்பத்திகள் அதிகரித்துக் காணப்படுகிறது என்றும் இதனைக்கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை இப்பகுதியில் இவ்வாறு சட்டவிரோத கசிப்பு விற்பனை அதிகரித்துக் காணப்படுவதுடன் வீடுகளில் வாழ்வாதாரத் தேவைகளுக்காக வளர்க்கப்படும் கால்நடைகள் கடத்தப்படுவதுடன் திருட்டுச் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

இதனால் தாங்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளதாகவும் இப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (5-4-315)

# மேலும் இரு கமநல நிலையங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் மேலும் இரண்டு புதிய கமநல அபிவிருத்தி நிலையங்கள் பரந்தன் மற்றும் முரசுமோட்டை ஆகிய பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முழங்காவில், பூநகரி, அக்கராயன், உருத்திரபுரம், இராமநாதபுரம், பளை,புளியம் பொக்கணை ஆகிய பகுதிகளில் இயங்கிவருகின்ற கமநல அபிவிருத்தி நிலையங்களைவிட மேலதிகமாக இரண்டு கமநல அபிவிருத்தி நிலையங்களும் இம்மாத முற்பகுதியில் ஆரம்பித்து வைக்கபட்டுள்ளன.

மேற்படி இரு கமநல அபிவிருத்தி நிலையங்களும் கிளிநொச்சி கமநல அபிவிருத்தி நிலையத்தில் இருந்தும் புளியம்பொக்கணை கமநல அபிவிருத்தி நிலையத்தில் இருந்தும் பிரித்தெடுக்கப்பட்ட பயிற்செய்கை நிலங்களையும் விவசாய அமைப்புக்களையும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.

மேற்படி கமநல சேவை நிலையங்களை உருவாக்குவதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகே வருகை தந்திருந்த வேளையில் முன்வைக்கப்பட்ட இக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு இவ் இரண்டு புதிய கமநல அபிவிருத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-4-315)

# கண்டாவளைக்கு மருத்துவ அதிகாரி நியமனம்

(தருமபுரம்)

கண்டாவளை பிரதேச பொறுப்பு மருத்துவ அதிகாரியாக கரைச்சி பிரதேச பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் கஜேந்திரா நியமிக்கப்பட்டு ள்ளதாக கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை தெரிவித்துள்ளது.

கண்டாவளை பிரதேசத்தின் மருத்துவ சேவைகளை இலகுபடுத்தும் வகையிலும் நிர்வாக செயற்பாடுகள் இலகுவாக முன்னெடுக்கும் வகையிலும் இந் நியமனத்தை மேற் கொண்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டாவளை பிரதேசத்தின் மேலதிக பொறுப்பு மருத்துவ அதிகாரியாக மருத்துவர் பிரியந்தினி கமலசிங்கம் கடமையாற்றி வரும் நிலையில் மருத்துவர் கஜேந்திரா கரைச்சிக்கு மேலதிகமாக கண்டாவளைக்கும் நியமிக்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை அறிவித்துள்ளது. (5-4-314)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

தற்போது யாழில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முஸ்லிம் மஜ்லிஸ் அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம் நாளை 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 4 மணிவரை பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாமில் குருதிக் கொடையாளர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-18)

# மேற்படிப்புக்காக செல்லும் மருத்துவர்

(நெளுக்குளம்)

வவுனியா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி. க.ராகுலன் மருத்துவ நிர்வாக மேற்படிப்புக்காக மத்திய சுகாதார அமைச்சிற்கு அண்மையில் சென்றுள்ளார்.

வவுனியா மருத்துவமனைப் பணிப்பாளர் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்ட அவர் தனது கடமைகளை பதில் பணிப்பாளராகக் கடமையாற்றிய மருத்துவ கலாநிதி மதுரகனிடம் கையளித்துள்ளார். (5-4-299)

# இராசிபலன்

16.02.2022
மாசி 04, புதன்கிழமை
பூரணை முன்னிரவு 11.21 மணிவரை

ஆயிலியம் பிற்பகல் 4.07 மணிவரை
சுபநேரம் - 5.03-6.33 மணிவரை
இராகுகாலம் -12.33-2.03 மணிவரை

சந்திராஷ்டமம்-பூராடம், உத்தராடம்

வளவன்




மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்,வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் ஆதரவால் பெருமை காண்பீர்கள்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்களைச் சந்திக்கலாம்.




ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், நல்ல காரியங்கள் நடைபெறும் நாள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.




உறவினர்களும், நண்பர்களும் வலியவந்து பேசுவார்கள், பேச்சில் கனிவு பிறக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலம் தரும் விடயங்கள் ஏற்படலாம், நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள்.




திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படைவீர்கள், தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள்.




எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெறும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், ஆன்றோர் சந்திப்புண்டு.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.




உறவினர் வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், பொருள் வரவிற்கு அத்திபாரமிடுவீர்கள்.




திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வீட்டுத் தேவைகளை எளிதில் நிறைவேற்றுவீர்கள், போசன சுக[illegible]




திட்டமிட்ட காரியங்களில் சிறுதடை தாமதங்கள் என்பன இடம்பெறலாம்,பயணங்களால் மன உளைச்சல் ஏற்படலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க [illegible] நாள்.




அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, தாழ்ந்தசுபாவமுண்டு, குடும்ப நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு நிறைந்த இன்சொல் இரும்புக் கதவைக் கூடத் திறக்கும்.

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2022-14.03.2022



**நட்புக்கு எப்போதும் முக்கியத்துவம் கொடுக்கும் சிம்ம இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சூரியன் சப்தம ஸ்தானத்தில் குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்க வழி பிறக்கும்.

**ராகு-கேது ஆதிக்கம்**

உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் ராகுவும், 4 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். தொழில் ஸ்தானத்தில் ராகு இருப்பதால், தொழில் வளம் சிறப்பாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். சுயதொழிலை விரிவு செய்யும் முயற்சிக்கு போதுமான நிதியும், உதவியும் கிடைக்கும். சுக ஸ்தானத்தில் கேது இருப்பதால், ஆரோக்கியத் தொல்லை வரலாம். அலைச்சலைக் குறைத்துக் கொள்ளுங்கள். சரியான நேரத்தில் உணவு சாப்பிடுங்கள். சகோதர வழியில் நடைபெறும் சுபகாரியங்களை முன்னின்று நடத்துவீர்கள். மனை விற்பனையால் இலாபம் உண்டு. பயணங்களில் கவனம் தேவை.

**மகர-சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி மாதம் 14 ஆம் திகதி, மகர இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அவர் அங்குள்ள சனியோடும், தன- லாபாதிபதியான புதனோடும் இணைந்து சஞ்சரிக்கிறார். இதனால் பொருளாதார பற்றாக்குறை அகலும். புதிய திருப்பங்கள் ஏற்படும்.

கொடுக்கல்- வாங்கலை ஒழுங்கு செய்வீர்கள். ஜீவன ஸ்தானம் பலம் பெறுவதால் நிலையான வருமானத்திற்கு வழியமைப்பீர்கள். குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசிய மற்றும் ஆடம்பரப் பொருட்களை வாங்குவீர்கள். பொதுவாக இக்காலத்தில் நல்ல சம்பவங்கள் பல நடைபெறும்.

**உச்ச செவ்வாய் சஞ்சாரம்**

மாசி 14 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்லும் செவ்வாய், அங்கு உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகமான செவ்வாய் உச்சம் பெறுவதால், நல்ல சந்தர்ப்பங்கள் தேடிவரும். குறிப்பாக தொழில் வளம் மிகச் சிறப்பாக இருக்கும். செல்வந்தர்களும், நண்பர்களும் போட்டி போட்டுக் கொண்டு உதவுவர்.




சென்ற மாதத்தில் செய்த முயற்சிகள் பலன் அளிக்காமல் போயிருந்தால், அவை இப்பொழுது துரிதமாக நடைபெறும். இட விற்பனையால் தன லாபம் உண்டு. உத்தியோகத்தில் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் வந்து சேரும்.

**கும்ப - புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். தன - லாபாதிபதியான அவர், கும்ப இராசியில் சஞ்சரித்து உங்கள் இராசியைப் பார்க்கும் நிகழ்வு, மாசி 17 ஆம் திகதி நிகழவிருக்கிறது. இதன் விளைவாக மிதமிஞ்சிய பொருளாதாரம் ஏற்படும். ஒரு சிலருக்கு கிளைத் தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகலாம். தசாபுத்தி பலம் பெற்றிருப்பவர்களுக்கு, நடக்கும் தொழிலை விரிவு செய்யும் முயற்சி கைகூடும். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டு. உடன் பிறப்புகளுடன் இருந்த பகை மறையும். இம்மாதம் ஞாயிற்றுக் கிழமை தோறும் சிவன், உமையவள் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெறும் மாதம் இது. பண வரவு திருப்தி தரும். கணவன் - மனைவிக்குள் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். அருகில் இருப்பவர்களால் ஏற்பட்ட சிக்கல்கள் அகலும். பிள்ளைகள் வழியில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்பு உண்டு. உங்கள் பெயரிலேயே இடம் வாங்கும் யோகம் உருவாகும். பணிபுரியும் பெண்களுக்கு மேலிடத்து ஆதரவும் எதிர்பார்த்த சலுகைகளும் கிடைக்கலாம்.

## இல்லத்தில் மங்கல ஓசை கேட்க வழிபிறக்கும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**சமயோசிதமாகப் பேசி காரியங்களைச் சாதிக்கும் கன்னி இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன் பஞ்சம ஸ்தானத்தில் சனியோடு சஞ்சரிக்கிறார். குருவின் பார்வை தன ஸ்தானத்தில் பதிகிறது. எனவே பொருளாதாரம் திருப்தி தரும். குடும்பப் பிரச்சினை தீரும்.

**ராகு-கேது ஆதிக்கம்**

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் ராகுவும், 3 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். எனவே தந்தை வழி உறவில் சிறு விரிசல்கள் ஏற்படலாம். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. 3 இல் கேது இருப்பது முன்னேற்றத் தடையை உருவாக்கலாம். வழக்குகளில் எதிரிகளுக்கு சாதகமான பலன் கிடைக்கலாம். சொத்து பிரச்சினைகளும், சொந்தங்களின் பிரச்சினைகளும் மீண்டும் தலைதூக்கும்.

**மகர-சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி மாதம் 14 ஆம் திகதி, மகர இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், பொருளாதார நிலை சீராகும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும். வளர்ச்சிப் பாதையில் இருந்த இடையூறுகள் அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த புதிய வேலை கிடைக்கலாம். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு நல்ல பொறுப்புகள் கிடைக்கும். புதனோடு சுக்கிரன் சேர்ந்து 'புத சுக்கிர யோகத்தை உருவாக்குவதால் நல்ல சம்பவங்கள் பல நடைபெறப்போகிறது.

**உச்ச செவ்வாய் சஞ்சாரம்**

மாசி 14 ஆம் திகதி, மகர இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு




அதிபதியான செவ்வாய், 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது சகோதர வழியில் சில நன்மைகள் கிடைக்கும். உடன் பிறந்தவர்களின் இல்லத்து சுபகாரியங்களை முன்னின்று நடத்துவீர்கள். புதிய சொத்துக்களை வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். கிடைக்கும் சந்தர்ப்பங்களை நழுவ விடாதீர்கள். உத்தியோகத்தில் நீங்கள் கேட்ட சலுகைகள் இப்பொழுது கிடைக்கலாம்.

**கும்ப - புதன் சஞ்சாரம்**

மாசி 17 ஆம் திகதி, கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கும், 10 ஆம் இடத்திற்கும் அதிபதியாக விளங்கும் புதன், கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவர். அவர் 6 இல் மறைவது யோகம் தான். எனவே பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும். இல்லம் கட்டிக் குடியேற வேண்டும் என்ற ஆசை நிறைவேறும். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சு முடிவாகும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் நவக்கிரகத்தில் உள்ள குருவை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

ஆறில் குரு இருப்பதால் இம்மாதம் அமைதிக்குறைவு ஏற்படலாம். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமே விருப்பங்கள் நிறைவேறும். தகுந்த ஓய்வு உடல் நலத்தை சீராக்கும். பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். பொறுமையோடு செயற்படுவது நல்லது.

## குடும்ப பிரச்சினை தீரும்!

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் பிரச்சினைக்கு தீர்வு கோரி தமிழக மீனவர்கள் உண்ணாவிரதப் போராட்டம்

(சென்னை)

இலங்கை அரசை கண்டித்தும் மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு பெற்றுத்தர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் இராமேஸ்வரம் மீனவர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

அதன்படி, எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் தங்கச்சி மடத்தில் தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளதுடன் கடந்த டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 10 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளையும் 50 இற்கும் மேற்பட்ட மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர்.

இன்று முதல் இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவும் தீர்மானித்துள்ளனர்.

மீனவர்களின் இந்த காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக இராமேஸ்வரத்தில் உள்ள 800 இற்கும் மேற்பட்ட விசைப் படகுகள் கடற்கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன.

மீனவர்களின் போராட்டங்கள் காரணமாக இராமேஸ்வரம், பாம்பன், தங்கச்சிமடம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மீனவர்கள் நேரடியாகவும் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மீன்பிடி சார்பு தொழிலாளர்களும் வேலை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 2.4 பில்லியன் டொலர்

# இந்தியாவிடம் இருந்து கடனாக பெறத்திட்டம்- அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

இந்தியாவிடமிருந்து 2.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக இம்மாதம் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் குறிப்பிட்டார். (நி)



# தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மாதாந்தம் கோதுமை மா நிவாரணம்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மாதாந்தம் 15 கிலோ கோதுமை மாவை சலுகை விலையில் வழங்க அமைச்சரவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை அனுமதி வழங்கியது.

"பொதுமக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார பிரச்சினைகளை குறைப்பதற்கான முன் மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல்" என்ற நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதனைத் தொடர்ந்து வர்த்தக அமைச்சர் தலைமையிலான குழுவொன்று நிவாரணம் வழங்குவது தொடர்பான தீர்மானத்தை பரிசீலித்து பரிந்துரையை வழங்கிய நிலையில் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (நி)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து 78% கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன

## கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை

(கொழும்பு)

எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து கடலில் வீழ்ந்த மோசமான கழிவுப் பொருட்களில் 78 விகிதமானவை அகற்றப்பட்டுள்ளதாக இலங்கையின் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

மீட்பு நடவடிக்கைக்கு பொறுப்பான அமெரிக்காவை தளமாகக் கொண்ட நிறுவனம் இந்த தகவலை வழங்கியுள்ளதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை, எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் அழிவினை அடுத்து கடலில் வீழ்ந்துள்ள கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக சீன நிறுவனமொன்றுக்கு சொந்தமான இரண்டு கப்பல்கள் இலங்கை கடற்பரப்பிற்கு வந்துள்ளன.

சேதமடைந்த பொருட்களை அகற்றுவதற்கான திட்டத்தை தயாரிப்பதற்காக இந்த இரண்டு கப்பல்களாலும் பூர்வாங்க பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை மே மாதத்திற்குள் தமது பணிகள் அனைத்தும் நிறைவடையும் என சீன நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இன்று ஒரு தகவல்

## எதையும் சமாளிக்கும் ஆற்றலை எப்படிப் பெறுவது?

உடல் மட்டும் உறுதியாக இருந்தால் போதாது. உள்ளமும் உறுதியுடன் இருக்க வேண்டும். அப்போது தான் இந்த உலகத்தில் எதையும் சமாளித்து நம்மால் வாழ முடியும்.

வாழ்க்கையில் திடீரென்று சில எதிர்பாராத தாக்குதல்கள் ஏற்படலாம். விபத்து ஏற்படலாம். உடம்பில் தாங்க முடியாத வலி ஏற்படலாம். நோய் ஏதாவது வரலாம். தோல்வி ஏற்படலாம். எது வந்தாலும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் வேண்டும்.

இல்லாவிட்டால் வாழ்க்கை மாபெரும் தோல்வியாகி விடும். உலகத்தில் பிரச்சினைகள் எப்போதும் நிறைந்திருக்கின்றன. பிரச்சினைகள் இருந்தால் மனிதன் அவற்றை எதிர்த்து சமாளித்து ஆற்றல் பெற முடியும்.

இதற்காகவே பிரச்சினைகளை கடவுள் உண்டாக்கியிருக்கிறார் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இது உண்மையே!

பிரச்சினைகளை எதிர்த்து வென்று வாழ்பவன் தான் மனிதன் மற்றவர்கள் எல்லோரும் மிருகங்களைப் போன்றவர்கள்,

மிருகங்கள் எவ்வளவுதான் வலிமையுடன் இருந்தாலும் ஆபத்தைக் கண்டு ஓட்டம் பிடிக்கும் மனிதனும் இதே செயலைச் செய்யலாமா?

ஒவ்வொருக்கும் தேவையான உண்மையான பலம் அவர்கள் மனத்தில் மறைந்திருக்கிறது. இதை எல்லோரும் உணர வேண்டும்.

எதிர் வீட்டு இராமனுக்கு இருக்கும் துணிவும் ஆற்றலும் நமக்கு இல்லையே ? என்று ஒருவன் எண்ணுகின்றான், அப்படி எண்ணுகிறவன் கோழை ஆகி விடுகின்றான்.

ஆனால் அவன் மனத்திலும் துணிவும் ஆற்றலும் பதுங்கி இருக்கின்றன. இவற்றை பயன்படுத்த அவனுக்கு தெரியவில்லை அவ்வளவு தான் !

துன்பம் வந்தால் மற்றவர்கள் மீது பழி போடுவது பயனில்லை விதியின் மீது பழியைப் போடுவதும் தவறு.

துன்பத்துக்குக் காரணம் என்ன என்று கண்டு பிடித்து முதலில் காரணத்தைப் போக்க வேண்டும் இல்லாவிட்டால் தொடர்ந்து துன்பங்கள் வரும்.

ஒருவருக்கு மனம்தான் எல்லாம் அவன் மனத்தில் என்ன எண்ணுகிறானோ அதே போல் அவன் மாறிவிடுகிறான் என்கிறார் புத்தர்.

எண்ணம் போல் வாழ்வு என்பதும் இதை ஒட்டிய கருத்தே.

தான் நல்லவனாக வேண்டுமென்று ஒருவன் மனப்பூர்வமாக எண்ணினால் அவன் நல்லவனாக மாறுகிறான். கெட்டவன் என்று எண்ணினால் கெட்டவானாக மாறுகிறான். பலமுள்ளவன் என்று எண்ணினால் பலமுள்ளவனாகிறான். கோழை என்று எண்ணினால் கோழையாகி விடுகிறான்.

ஆகையால் மனத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ள ஒவ்வொருவரும் பழகிக் கொள்ள வேண்டும்.

மனத்தில் தோன்றும் ஆரோக்கியமான எண்ணங்களே மனிதனைப் பெரும்பாலும் வெற்றியுள்ள மனிதனாக மாற்றி விடுகின்றன. இது உறுதி.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## விலைமதிப்பில்லாத பசு



ஒரு மனிதன் தனது மூன்று மகன்களுடனும் ஒரு பசுவுடனும் வாழ்ந்து வந்தான். தன் பசுவை விலைமதிப்பில்லாத செல்வமாகக் கருதினான். அந்தப்பசு ஒவ்வொரு வருடமும் தவறாமல் ஆரோக்கியமான கன்றை ஈன்றதால் அவன் மிகவும் பெருமையுடன் இருந்தான்.

ஒரு நாள் தன் மூத்த மகனை பசுவை மேய்ச்சலுக்கு அழைத்துச் சென்று தண்ணீர் அருந்த வைத்து அழைத்து வருமாறு அனுப்பினான். மூத்த மகன் பசுமையான புல்வெளிக்கு பசுவை அழைத்துச் சென்று மேய விட்டான். பின் அருகில் இருந்த நீர் நிலைக்குக் கூட்டிச்சென்று தண்ணீர் குடிக்க வைத்து திருப்ப அழைத்து வந்தான். பிறகு அந்த பசுவிடம் வந்த அந்த மனிதன் "உனக்கு போதுமான அளவு சாப்பிட்டாயா?" என்று கேட்டான். அந்தப் பசு "ஹூம்" என்ற அலுப்புடன், "உன் பொல்லாத மகன் என்னை எங்கோ ஒரு புல் கூட முளைக்காத காட்டுக்கு அழைத்துச் சென்று விட்டான். என்னை அங்கே விட்டு விட்டு அவன் வந்து தூங்கி விட்டான்" என்றது.

கடுமையாக கோபப்பட்ட அந்த மனிதன் தனது மூத்த மகனை வீட்டை விட்டு வெளியே துரத்தி விட்டான்.

மூத்த மகன் பசுமையான நிலத்தையும் வறண்டு போன நிலத்தையும் மாறிமாறிக் கடந்து ரொம்பத்தூரம் பயணித்து ஒரு பண்ணைக்குப் போனான். அங்கே ஒரு அன்பான விவசாயியைச் சந்தித்தான். விவசாயி அவனைத் தன்னுடன் இருக்க சம்மதித்தான். வறண்ட மண்ணாக இருந்தாலும் சரி ஈரமான மண்ணாக இருந்தாலும் சரி இரண்டிலும் எப்படி விவசாயம் செய்வது என்பதை விவசாயி அவனுக்குக் கற்றுக் கொடுத்தான்.

"ஒருநாள் உன் அப்பாவிடம் உன்னை ஒப்படைக்க வேண்டியிருக்கும். அப்போது நீ இதைக் கற்றுக்கொண்டிருப்பதால், அந்தப் பொல்லாத பசுவின் தயவு இல்லாமல் உன் அப்பாவுடன் நிம்மதியாக வாழலாம்" என்று கூறினார் விவசாயி.

இதனிடையே, மூத்த மகனை விரட்டிவிட்ட அந்த மனிதன் தன் இரண்டாவது மகனை பசுவை மேய அழைத்துச் சென்று குளிப்பாட்டி வர வேண்டும் என்று சொல்லி அனுப்பி வைத்தான். அவனும் பசுவைக் கூட்டிச் சென்று நல்ல பசுமையான சமவெளியில் மேயவிட்டான். பிறகு நன்கு தேய்த்துக் குளிப்பாட்டி விட்டு ஈரம் உலர்வதற்காக ஒரு மரத்தடியில் கட்டினான். பசுவின் ஈரம் காய்வதற்குள் சிறிது நேரம் கண் அயர்ந்து விட்டான்.

அப்போது பசுவைத் தேடிக்கொண்டு அங்கே வந்த அந்த மனிதன் "என்ன... வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டாயா?" என்று கேட்டான்.

"ஹூம்" என சத்தம் போட்ட பசு "உன் பொல்லாத மகன் இருக்கிறானே... அவன் என்னை துளிகூட புல் முளைக்காத காட்டுக்குள் அலைய வைத்து விட்டு அங்கே கொண்டு வந்து கட்டிப்போட்டு விட்டு தூங்கிப் போய் விட்டான்" என்று பதில் சொன்னது.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்




அதே இடத்தில் தான் மாவலி என்ற மன்னனும் ஆண்டு வந்தான் என்பதும் அறிவிக்கப்பட்டது. வள்ளல் ஒருவன் அழிந்தான் என் பது கேட்கப் புதுமை யாக இருந்தது.

தீயவர்கள் அழிவதும் நல்லோர்கள் வாழ்வதும் அறத்தின் ஆக்கம் என்று கூறுவர். கொடை வள்ளலாக வளர்ந்தவன்; புகழின் எல்லையில் நின்றவன்; அவனை ஏன் திருமால் காலால் மிதித்து மாய்க்க வேண்டும்?

நல்லது செய்தாலும் ஆணவம் கூடாது; அடக்கம் காட்டி இருக்க வேண்டும். ஈகை என்பது மற்றவர்கள் தேவை அறிந்து அவர்கள் குறையைப்போக்குவது. உடையவர்கள் இல்லாதவர்களுக்கு உதவுதல், அவர்கள்கடமையாகும் மேகம் மழை பெய்கிறது என்றால், மக்கள் தன்னைப் புகழ வேண்டும் என்று அது எதிர்பார்ப்பது இல்லை; அது தன் கடமையைச் செய்கிறது. "மாரி அன்ன வண்கை" என்றுதான் புலவர்கள் வள்ளல்களைப் பாராட்டினார்கள். ஊரில் நீர் நிலை இருந்தால், அது தனி ஒருவனுக்கு மட்டும் உரியது அன்று; அதே போலத் தான் செல்வர்களின் செல்வமும் பயன் பட வேண்டும். ஈயார் தேடிய பொருளைத்தீயார் கொள்வர் ஈட்டும் செல்வம் நாட்டுக்குப் பயன் பட வேண்டும்.

மாவலி தந்தது புகழ் கருதி மட்டும் அன்று; இதனை ஒரு யாகமாகக் கொண்டான்; அதனால் புண்ணியம் கிடைக்கிறது; அதன் விளைவு இந்திரப் பதவி என்று திட்டம் தீட்டினான்; அவன் செயலில் கண்ணியம் இல்லை; புண்ணியம்தான் இருந்தது.

தேவர்கள் வந்து திருமாலிடம் முறையிட்டனர். "இவன் புகழ் மிக்கவனாக வளர்ந்தால் விரைவில் இந்திரப் பதவியை அடைவான்; இவனை அடக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர்.

"ஆணவம் மிக்க அவனை அவன் சொல்லாலேயே அழிக்க வேண்டும்" என்று திட்டமிட்டு, வாமனனாய் அவதரித்து, மூன்று அடி மண் கேட்டு, விண்ணையும் மண்ணையும் அளந்து மூன்றாம் அடியை அவன் தலைமேல் வைத்து, அவனைப் பாதாளத்தில் அழுத்தினார். இந்தக் கதையை அவ் இளம் சிறுவர்க்கு வளம்மிக்க தவம் உடைய முனிவர் எடுத்து உரைத்தார். மாவலி ஆண்ட மண் அது; அவன் மாண்டதும் அதே மண்தான்; அதனால் அந்த இடம் பெருமை பெற்றது என்பதைவிட வாமனனாய் வந்து, நெடு மாலாய் நிமிர்ந்து நின்ற இடம் அது; அதனால் அது சிறப்புப் பெற்றது. திருமாலின் திருவடி தீண்டப் பெற்றதால் அந்த இடம் 'திவ்வியத் தலம்' ஆயிற்று.

அந்த இடத்துக்குச் 'சித்தாசிரமம்' என்ற பெயர் வழங்கலாயிற்று. "நினைத்த பொருள் கைகூடும் இயல்பினது" என்ற பொருளில் இந்த இடத்துக்கு இப் பெயர் அமைந்தது.

வேதம்கற்ற அந்தணர், வேள்விகள் இயற்றுவதைத் தம் தொழிலாகக் கொண்டிருந்தனர். தீ வளர்த்து, அவிசு சொரிந்து, தேவர்களுக்கு உணவு தந்தனர்; அவர்கள் புகழ் மிக்க இந்தத் திருத்தலத்தைத் தாம் யாகம் செய்யும் பூமியாகத் தேர்ந்து எடுத்தனர்; அதனால், அங்கே ஆசிரமங்கள் அமைத்துக் கொண்டு வேதம் ஓதுவதும் வேள்விகள் இயற்றுவதும் தம் தொழிலாகக் கொண்டனர்; விசுவாமித்திரரும் தாம் மேற்கொண்ட தவத்துக்குரிய இடமாக அந்த இடத்தைத் தேர்ந்து எடுத்தார்; அங்கு வந்திருந்த ஏனைய வேதியர்களும் முனிவர்களும் அவர் தலைமையை ஏற்று அடிபணிந்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் சமயத்திற்காகச் சண்டையிடுவார். ஆனால், சமய வாழ்வு வாழ மட்டும் செய்யார். சிலரேனும் வாழ முயல வேண்டாமா? அதுகூடக் கிடையாது. – பிரிஸ்வெல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கேதீச்சரத்தில் மாதா சொரூபம் தீய சக்திகளை இனங்காணுங்கள்

வடபுலம் தமிழர் தாயகம் என்பதை உறுதி செய்யும் வரலாற்றுச் சான்றாகவுள்ள பாடல் பெற்ற மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தின் நுழைவாயில் வளைவு இருந்த இடத்தில் மாதா சொரூபம் அதிரடியாக அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மாதா சொரூபத்தை அதிரடியாக அமைப்பதன் மூலம்; தமிழ் மக்களிடம் இருக்கக்கூடிய, மதசார்பற்ற ஒற்றுமையைக் குலைப்பதற்கு சில தீய சக்திகள் ஈடுபட்டுள்ளன என்பதை ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அறிந்து கொள்ள வேண்டும்.

இதுவிடயத்தில் கத்தோலிக்க மக்களையோ அன்றி தமிழே தம்மூச்சென்று வாழக்கூடிய புனிதமான கத்தோலிக்க மதகுருமாரையோ எவரும் குறைகண்டுவிடக்கூடாது.

இதில் சைவ மக்கள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும்.

திருக்கேதீச்சர நுழைவாயில் வளைவை அடித்து வீழ்த்தி நந்திக் கொடியை சப்பாத்துக் காலால் மிதித்து, சைவ மக்களின் மனங்களை வேக வைத்த ஈனர்களைப் பின்னணியாகக் கொண்டு மன்னாரில் சைவ – கத்தோலிக்க மக்களின் ஒற்றுமையைக் குலைக்கவும் அவர்களிடையே மோதலை ஏற்படுத்தவுமான ஒருபெரும் திட்டமிடலே இது என்பதை ஒட்டுமொத்த தமிழ் மக்களும் உணர்ந்து கொள்வது இன்றைய அவசர தேவையாகும்.

இந்தப் பின்னணியில் கத்தோலிக்க மதகுருமார் சிலர் இருக்கிறார்கள் என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

தமிழ் மக்களிடையே மதக் கலவரத்தை ஏற்படுத்தி, தமிழினத்தை வேரறுக்க முற்பட்டுள்ள இந்தத் தீய சக்திகளுக்கு அரசியல் புலத்தில் – படைத்தரப்பில் மிகப்பெரிய செல்வாக்கு உண்டென்பது நிராகரிக்க முடியாத உண்மை.

ஆம், மன்னார் திருக்கேதீச்சர ஆலய நுழைவாயிலில் அமையப்பெற்ற வளைவு அடித்து வீழ்த்தப்பட்ட விவகாரம் நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

இந்த நாட்டின் நீதிபரிபாலனத்தைக் கட்டிக் காக்கவல்ல நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கையில், குறித்த இடத்தில் மாதா சொரூபத்தை அதிரடியாக அமைப்பதென்பது நீதிமன்றத்தை அவமரியாதை செய்கின்ற விடயமாகவே கருதப்படும்.

தவிர நீதிமன்றத்தை பொருட்படுத்தாமல், மாதா சொரூபத்தை அமைக்க முடிகிறது எனும்போது, அதனை சாமானிய மக்களோ அன்றி திருச்சபையின் சட்டதிட்டங்களை மதித்து புனித விவிலியத்தை பின்பற்றி இறைபணி செய்கின்ற கத்தோலிக்க மதகுருமாராலோ செய்ய முடியாது.

மாறாக, சைவ – கத்தோலிக்க மக்களிடையே மதக் கலவரத்தை ஏற்படுத்துகின்ற நோக்கோடு, உயர் அதிகார மட்டத்தோடு இணைந்து செயற்படக்கூடிய; கத்தோலிக்க மதகுரு என்ற அடையாளத்தைப் பயன்படுத்தி மிக தந்திரோபாயமாக நடக்கின்ற இக்கொடுஞ் செயல் தமிழினத்தை வேரறுக்கவல்லது என்பதால், தமிழ் இனத்தின் மீது பற்றுக் கொண்ட அத்தனை உறவுகளும் இது விடயத்தில் விழிப்பாக இருந்து தமிழினத்தின் பேரால் எங்கள் ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டும்.

## யாழ். போதனாவில் வெளிநாடு செல்வோருக்கான பிசிஆர் சோதனை ஆரம்பம்

யாழ். போதனா வைத்தியசாலையில் இடைநிறுத்தப்பட்டிருந்த பிசிஆர் பரிசோதனைகள் இன்று புதன்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக போதனா வைத்தியசாலை பணிப்பாளர் நந்தகுமாரன் தெரிவித்துள்ளார்.

வெளிநாடு செல்வோருக்கான பிசிஆர் பரிசோதனைகள் கடந்த வாரம் முதல் யாழ். போதனா வைத்தியசாலையில் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டுவந்த சுகாதார தொழிற்சங்கங்களின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக வெளிநாடு செல்வோருக்கான பிசிஆர் பரிசோதனைகளை வைத்தியசாலையில் மேற்கொள்வதில் சிக்கல் காணப்பட்டமையால் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இன்று முதல் மீளவும் வெளிநாடு செல்வோருக்கான பிசிஆர் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-18.33.104)

## தமிழ் கட்சிகளின் கருத்தரங்கு இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ் தேசியக் கட்சி என்பன இணைந்து நடத்தும் "ஈழத் தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வும் தேசிய, பிராந்திய, சர்வதேச நிலைவரங்களும்" எனும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கல்வியங்காடு சட்டநாதர் வீதி, இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

அதேவேளை கடந்த 12 ஆம் திகதி நடைபெறவிருந்த இக்கருத்தரங்கு தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4)

## மூன்று மாதங்களுக்கு மின்வெட்டு இல்லை
### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

(கொழும்பு)

எதிர்காலத்தில் திட்டமிடப்பட்ட மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல்களை அடுத்து இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இதனை அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இன்று முதல் ஹைட்ரோ மின் உற்பத்தி 50% குறைக்கப்படும் எனவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் புதிய முறையானது எதிர்காலத்தில் திட்டமிடப்பட்ட மின்வெட்டுகளை அனுமதிக்காது என்றும் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். (நி)

## வடக்கில் மேலும் 14 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

வடக்கில் மேலும் 14 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். ஆய்வுகூடங்களில் நேற்றையதினம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் குறித்த தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில்,

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 30 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 6 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் 26 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 8 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களுள், யாழ். போதனா வைத்தியசாலையில் 5 பேர் (12 வயது சிறுவன் உட்பட), கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் 4 பேர் ( 22.23 வயது இளைஞர்கள் உட்பட), சாவகச்சேரி பிரதேச வைத்தியசாலையில் 4 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா பொது வைத்தியசாலையில் 58 வயது ஆண் ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார். (ம)

## மன்னாரில் புதையல் தோண்டிய ஒருவர் கைது

மன்னார் அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருவில்வான் பகுதியில் புதையல் தோண்டிய சந்தேகத்தின்பேரில் ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் இராணுவ புலனாய்வுத் துறையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து இராணுவம் மற்றும் அடம்பன் பொலிஸார் இணைந்து குருவில்வான் பகுதியில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு மேலும் ஆறு சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு தொகுதி பொருட்களை இராணுவம் மற்றும் பொலிஸார் மீட்டுள்ளனர். (ம-285)

## காசோலை வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தென்னை பயிர்ச்செய்கை சபையால் பயனாளிகளுக்கு காசோலை வழங்கும் நிகழ்வானது நாளை, நாளை மறுதினம் மற்றும் எதிர்வரும் 22 ஆம் திகதி திகதிகளில் வலிகாமம் தென்னை அபிவிருத்தி சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில்நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வானது உடுவில், கோப்பாய், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், உரும்பிராய், சங்கானை கமநல சேவை நிலையங்களில் இடம்பெறவுள்ளது.

மேலும் 1,500 பயனாளிகளுக்கு பயன்தரு மரக்கன்றுகளும் ஊடுபயிர்ச்செய்கை தொடர்பான விரிவான கருத்தரங்குகளும் நடைபெறவுள்ளன. (ம)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

நரேந்திரர் எழுந்து வெளியே சென்றார். அறையில் கேதார், பிராண கிருஷ்ணர், ம- முதலிய பலர் இருந்தனர்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: இதோ பாருங்கள் பாட்டு, வாத்தியம், படிப்பு எல்லாவற்றிலும் நரேந்திரர் கெட்டிக்காரன் அன்றொருநாள் கேதாருடன் வாதம் செய்தான், கேதாரின் வாதங்களை எல்லாம் நொறுக்கித் தூள் தூளாக்கி விட்டான். (குருதேவரும் மற்றவர்களும் சிரித்தனர்) குருதேவர் (ம.விடம்): ஆங்கலத்தில் தர்க்கம் பற்றி ஏதாவது புத்தகம் இருக்கிறதா?

ம-ஆம் சுவாமி, ஆங்கிலத்தில் தர்க்க சாஸ்திரம் உண்டு.

ஸ்ரீராமகிருஷ்ணர்: நல்லது அதைப் பற்றி சிறிது கூறு கேட்கலாம்.

ம-தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டார். அவர் கூறினார், பொதுவான கருத்திலிருந்து குறிப்பிட்ட கருத்தை கூறும் தர்க்கம் ஒரு வகை. உதாரணமாக மனிதர்கள் எல்லோரும் சாகக் கூடியவர்கள், பண்டிதர்களும் மனிதர்களே. ஆகவே பண்டிதர்களும் சாகக் கூடியவர்கள். இது ஒருவகை.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

78

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



பண்டைய நாட்களில் நாழிகைக் கணக்கர் என்பவர்கள், குறுநீர்க்கன்னல் என்னும் கருவியைக் கொண்டு நாழிகையைக் கணக்கிட்டுக்கூறியதாக முல்லைப்பாட்டு குறிப்பிடுகிறது.

"பொழுதளந்து அறியும் பொய்யா மாக்கள்
தொழுது காண்கையர் தோன்ற வாழ்த்தி
எறி நீர்வையகம் வெலீ இயசெல் வோய்நின்
குறு நீர்க்கன்னல் இணைத் தென்று இசைப்ப" (முல்லைப் பாட்டு)

ஒரு கலத்தில் நிறைத்து வைக்கும் நீரைச், சின்னம் சிறு துளை வழியாகச் சிறுகச் சிறுகக் கசிய விட்டு, அவ்வாறு கசியும் நீரை, அவ்வப்போது அளந்து காண்பதன் மூலம், நாழிகைக் காணும் முறையொன்றினைப் பழங்காலத்தினர் அறிந்திருந்தனர்.

அக்கருவிக்குக் குறுநீர்க் கன்னல் என்பது அவர்கள் இட்ட பெயர். கசியும் நீரை, அவ்வப்போது அளந்து நாழிகை அறிவிப்பதற்கென்றே சிலர் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்கள் அதில் செய்யும் சிறு தவறு, அரசன் செயல் முறைகளையே அடியோடு தகர்த்துவிடுமாதலின், அளந்து கணக்கிடுவதில் ஒரு சிறிதும் தவறு செய்யாத சிறந்த கணக்கர்களையே தேர்ந்தெடுத்து அவரிடம் அப்பணியை ஒப்படைத்து வைப்பர். அவர்கள். கருத்தெல்லாம், நாழிகை காணும் அது ஒன்றிலேயே ஒன்றிவிடும். அவர் சரியாக நேரத்தைக் கணக்கிட்டு மணி ஓசை மூலம் அறிவிப்பார்.

### நாழிகை வட்டில்

இதுவும் நாழிகை அளவைத் தெரிவிக்கும் ஒரு கருவி. இது மெல்லிய தகட்டால் கிண்ணம் போல குழிந்து இருக்கும். அதில் ஊசி முனைத் துவாரம் இருக்கும். நீரில் மிதக்கவிட்டால் கொஞ்சம் கொஞ்சமாக நீர் உள்ளே வரும். அது நிறைந்தவுடன் மூழ்கும். அதற்கு ஆகும் நேரம் ஒரு நாழிகை (24 நிமிடம்).

நாழிகை வட்டில்



### புல்லை நிறுத்தி அளந்து நாழிகை அறிதல்

பண்டைய தமிழர்கள் புல்லை நிறுத்தியும் நாழிகை அறிந்தனர். இதற்கு
"காட்டுத் துரும்பு எடுத்துக் கண்டம் பதினாறு ஆக்கி,
நீட்டுக் கடந்தது போகநின்றது நாழிகை." என்ற பாடல் சான்று பகர்கின்றது.

இப் பாடலில் கூறப்படுபவை கீழே தரப்படுகிறது.

காட்டுத் துரும்பு என்பது காட்டில் காய்ந்து கிடக்கும்புல். அதனை இரண்டு இரண்டாக மடக்கி 16 அளவீடுகளைக் குறிப்பதாக மாற்றிக் கொள்ள வேண்டும். பிறகு நிழல் சாயும் பக்கமாக, அந்த புல்லின், ஒரு பாதியை, தரையில் கிடக்கும் படியாகவும், மறுபாதி, மேலே நிமிர்ந்து நிற்கும் படியாகவும் வைப்பார்கள். நிமிர்ந்து நிற்கும்புல்லின் நிழல், சரியாக, கீழே படுத்துக் கிடக்கும் புல்லின் மேல் விழும்படி செய்வார்கள்.

நிமிர்ந்து நிற்கும் புல்லின் நிழல், கீழே படுத்து உறங்கும் புல்லின் நீளத்தை விட, நீளமாக இருக்குமானால், நிமிர்ந்து நிற்கும் புல்லின் உயரத்தை, கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து, புல்லின் நிழலும், படுத்துறங்கும் புல்லின் நீளமும், சமமாக இருக்குமாறு அமைப்பார்கள். நிமிர்ந்து நிற்கும் புல்லின் நிழலை விட, படுத்துறங்கும் புல்லின் நீளம் அதிகமாக இருப்பின், படுத்துறங்கும் புல்லின் நிழலுக்குச் சமமாக புல்லின் நீளத்தைக் குறைப்பார்கள். இவ்வாறு, மேற் பகுதியிலோ, கீழ்ப்பகுதியிலோ ஒடித்து, ஒடித்து, நிழலையும், கீழே கிடக்கும் புல்லின் நீளத்தையும் சமப்படுத்துவார்கள். இரண்டும் சமமான பிறகு, நிமிர்ந்து நிற்கும் புல்லின் நீளத்தை விரற் கடையால் அளந்து பார்ப்பார்கள்.

விரற் கடையின் அளவே நாழிகை என்பதை அறிவார்கள். இந்த நாழிகையினை, காலைப் பொழுதாயின், கடந்து விட்ட நாழிகை எனவும், பிற்பகல் பொழுதாயின், மீதமிருக்கும் நாழிகை எனவும் கணக்கிட்டு அறிவார்கள். இம் முறையினைப் படிப்பதற்குத் தான் நேரமாகுமே தவிர, கணக்கிடுவதற்கு, ஒரு நிமிடம் கூட ஆகாது. புல்லின் நீளம் ஐந்து விரற்கடை எனில், காலைப் பொழுதில் கடந்தது ஐந்து நாழிகை ஆகும். அதனை மணியில் கூறுவதாயின், 5 நாழிகை X 24 நிமிடம் = 120 நிமிடங்கள் = 2 மணிநேரம். காலை 6 மணி + 2 மணி = 8 மணி. பிற்பகலாயின், மீதமிருப்பது ஐந்து நாழிகை. மாலை 6 மணி – 2 மணி = மாலை 4 மணி.

### விரல் நிழலால் நாழிகை அறிதல்

பண்டைய தமிழர்கள் விரல்நிழலால் நாழிகை அறிந்தனர். கீழ்வரும் பாடல் இதற்கு சான்று பகர்கின்றது.

"சுட்டால் விரல் மடக்கிச் சூரியனைவலமாக்கி
எட்டாம் விரல் இரட்டிக்க – முட்டாய்கேள்
அடியளந்து பார்த்து அலையநீவேண்டாம்
நொடி அளவில் சொல்லும் இது."

காலடியால் நிலத்தை அளந்து பார்த்து நாழிகையைக் கணக்கிடாமல் கைவிரலை உயர்த்தி நாழிகை கணக்கிடும் முறை இது. ஆள்காட்டி விரல் என்னும் சுட்டு விரலைச் செங்குத்தாக நிறுத்தி, பிறவிரல்களை மடக்கி, சூரியன் வலப்புறம் இருக்கும் படி நின்று கொண்டு, செங்குத்தாக உச்சி நோக்கி நிறுத்தப்பட்டுள்ள சுட்டு விரலின் நிழல் மடக்கியுள்ள பிற விரல்களின் மேல் விழுமாறு செய்தல் வேண்டும்.

முற்பகல் 15 நாழிகை. மடக்கியுள்ள விரல்கள் மூன்று. சுண்டு-விரலில் நிழல் விழுந்தால் முதலாவது ஐந்து நாழிகை. மோதிர விரலில் நிழல் விழுந்தால் 5-10 நாழிகை. நடு-விரலில் நிழல் விழுந்தால் 11`-15 நாழிகை. பிற்பகலில் பார்க்கும் போது எதிர்வரிசையில் அளவீடுகள் அமையும், இதனை முற்பகல் 15 நாழிகையுடன் கூட்டிக் கொள்ள வேண்டும்.

### தன் நிழலை அளந்து நாழிகை அறிதல்

தன் காலடியால் தன் நிழலைத் தானே அளந்து பார்த்து, பொழுது புலர்ந்து எப்போது எத்தனை நாழிகை ஆயிற்று என்பதை பண்டைய தமிழர் தெரிந்து கொண்டனர். இம்முறைபற்றி தஞ்சாவூரைச் சேர்ந்த கரந்தை ஜெயக்குமார் கீழ்வருமாறு கணிப்பிடுகிறார்.

"அடியளந்து பாண்டவரைக் கூட்டித் துரியோதன்
முதலோரை வகுக்க வந்த ஈவு ப்கல் நாழிகை."

இந்தப் பாட்டில் பாண்டவர் ஐவர், துரியோதன் முதலானோர் நூறு பேர். அவ் எண்ணிக்கை வைத்தே கணக்கிடப்படுகிறது. நாழி அளக்கும் முறை கீழே தரப்படுகிறது.

ஒருவர் வெயிலில் நிமிர்ந்து நிற்பார். விழும் நிழலின் நீளத்தை அளப்பார். நிழலின் நீளத்தோடு, ஐந்தினைக் கூட்டுவார். கூட்டி வந்த கூட்டுத் தொகையால், நூறை வகுப்பார். கிடைக்கும் ஈவேநாழிகை ஆகும். காலை நேரம் ஆயின் கடந்த நேரமாகும். பிற்பகல் நேரமாயின், மீதமிருக்கும் நேரமாகும்.

உதாரணமாக நிழலின் அளவு 5 காலடி என்போம். நிழலின் நீளம் 5 அடி. எனவே, 5 + 5 = 10, அடுத்து 100 ஐ பத்தால் வகுக்க வேண்டும், நூறை பத்தால் வகுத்தால் கிடைக்கும் ஈவு பத்து ஆகும். காலை எனில் கடந்தது பத்து நாழிகை. மாலை எனில், மீதமிருப்பது பத்து நாழிகை.

இன்றைய கணக்குப்படி, 10 நாழிகை X 24 நிமிடம் = 240 நிமிடங்கள் = 4 மணிநேரம். காலைப் பொழுது எனில், காலை 6.00 மணியில் இருந்து 4 மணி நேரத்தைக் கூட்டிக் கொள்ள வேண்டும். எனவே காலை 10 மணி. பிற்பகல் எனில், மாலை 6 மணியில் இருந்து 4 மணி நேரத்தைக் கழித்துக் கொள்ள வேண்டும். எனவே பிற்பகல் 2 மணி. இணையத்தில் இதற்கென ஒரு அட்டவணையுள்ளது.

### இரவு நேரம் நாழிகை அறிதல்

இரவு நேரத்தில் சந்திரன் அல்லது நட்சத்திரங்களைக் கொண்டு நேரம் அறியலாம். ஆனால் இதற்கு நமக்கு முக்கிய நட்சத்திரங்கள் பற்றிய அறிவு வேண்டும். நிலவு, நட்சத்திரங்கள் ஆகியன ஒவ்வொரு நாளும் உதயமாகும் நேரம் குறிப்பிட்ட இடைவெளியில் தள்ளிக் கொண்டே போகும். இதை வைத்து நேரம் அறியலாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 பேர்...

கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,874 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## வவுனியா...

வவுனியா குளுமாட்டுச்சந்தியில் இருந்து கணேசபுரம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த இளைஞர் எதிரே வந்துகொண்டிருந்த இரு மோட்டார் சைக்கிள்களுடன் மோதியதில் விபத்து இடம்பெற்றது.

இவ்விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். (ம)

## அராலியில்...

தங்க நகைகள் களவாடப்பட்டு உள்ளதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

வீட்டிலுள்ளவர்கள் நேற்று முன்தினம் உறவினர் வீட்டுக்கு காலை சென்று விட்டு மாலை வீட்டிற்கு திரும்பி வந்து பார்த்தவேளை வீட்டின் கதவு திறந்திருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது அலுமாரியில் இருந்த நகை களவாடப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

11 பவுண் தாலிக்கொடி, 1 1/2 பவுண் சங்கிலி என்பன இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம- 104)

## மட்டுவிலில்...

மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சடலத்தில் பெறப்பட்ட பி.சி.ஆர் மாதிரியின் அடிப்படையில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம -30)

## வல்லிபுர...

ளது.

வரலாற்று சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றது. வழமையிலும் பார்க்க மிகக்குறைவான பக்தர்களே ஆலயத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இதில் 5 பேருடைய தங்கச் சங்கிலிகள் களவாடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. (ம-60)

## பயங்கரவாத...

சிவில் சமூக பிரதிநிதிகள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் அதிகளவில் பங்கேற்று கையெழுத்திட்டனர்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கையெழுத்துப் போராட்டத்தில் அனைவரையும் இணைந்துகொள்ளுமாறு சர்வஜன நீதி (JUSTICE FOR ALL) என்ற அமைப்பின் ஊடாக அதன் இணைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் அழைப்பு விடுத்திருந்தார். (ம)

## பயங்கர...

இவ்வாறு 12 வருடங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமையால், அவரை விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம)

## மன்னாரில்...

மெய்யுமாக மாட்டிக் கொண்ட சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் உயர்தரப் பரீட்சையில் கணித பாடத்தில் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை இடம் பெற்றது.

இந்த நிலையில் குறித்த பாடசாலை அதிபரின் மகனான மாணவன் கணித பாட பரீட்சையின்போது குறித்த பரீட்சை மண்டபத்தினுள் மறைமுகமான முறையில் கையடக்கத் தொலைபேசி ஒன்றை கொண்டு சென்றுள்ளார்.

இந்த நிலையில் பிறிதொரு பாடசாலையின் பரீட்சை மண்டபத்தில் கடமையில் இருந்ததாகக் கூறப்படும் ஆசிரியர் ஒருவர் கணித பாடத்திற்கான பரீட்சை வினாத்தாளை கையடக்கத் தொலைபேசியில் புகைப்படம் எடுத்து அதனை வேறு ஒரு ஆசிரியருக்கு அனுப்பி அதற்கான விடையை குறித்த ஆசிரியர் மீளப் பெற்று குறித்த மாணவனது கையடக்கத் தொலைபேசிக்கு வாட்ஸ்அப் மூலம் அனுப்பியுள்ளார்.

குறித்த மாணவன் கையடக்கத் தொலைபேசியின் வாட்ஸ்அப் மூலம் வந்ததாக கூறப்படும் குறித்த வினாக்களுக்கான விடையை தொலைபேசியை பார்த்து பரீட்சை வினாத்தாளுக்கு விடை எழுதிக் கொண்டிருந்தார்.

இதன்போது குறித்த பரீட்சை மண்டபத்தில் பரீட்சை கடமையில் ஈடுபட்டிருந்த ஆசிரியர் ஒருவர் குறித்த மாணவன் கையடக்கத் தொலைபேசியை பார்த்து விடை எழுதிக் கொண்டு இருப்பதை அவதானித்துள்ளார்.

உடனடியாக குறித்த ஆசிரியர் குறித்த மாணவனை கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளார்.

குறித்த சம்பவத்துடன் ஈடுபட்டதாக கூறப்படுகின்ற ஆசிரியர்கள் மற்றும் பரீட்சை நிலைய கண்காணிப்பாளர்கள் கடமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். (ம-285)

## ஐ.நா. அறி...

மேலும் நியாயமான தீர்வு கிடைக்கும் என பாரிய நம்பிக்கையுடன் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் பங்கேற்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன்பெரும்பாலான சர்வதேச நாடுகள் இலங்கையின் நிலைப்பாட்டை எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்வார்கள் என எதிர்பார்ப்பதாகவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம)

## ஐஸ்...

அந்தோனிபுரத்தைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவரும் பருத்தித்துறையைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 818 கிராம் ஐஸ்போதைப் பொருளின் பெறுமதி 6 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-18,33,60,104)

# சமூகத்தில் வேகமாக பரவும் ஒமிக்ரோன், டெங்கு, வைரஸ் காய்ச்சல்

(கொழும்பு)

ஒமிக்ரோன், டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் ஆகியவை சமூகத்தில் பரவுவதைக் அவதானிக்கக் கூடியதாக இருப்பதாகத் தெரிவித்த சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத், 48 மணித்தியாலங்களுக்கு மேலாக காய்ச்சல் நீடித்தால் உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

மக்கள் தாங்கள் எந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறித்து தாங்களாகவே முடிவுகளை எடுக்க வேண்டாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஒமிக்ரோன் மற்றும் டெங்கு ஆகியவை வேகமாக அதிகரித்து வருவதை தாங்கள் அவதானித்துள்ளதாகவும் அது தவிர, தற்போது வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

மருத்துவ சிகிச்சையை பெறலாமா? வேண்டாமா? என்று மக்கள் தங்கள் சொந்த முடிவுக்கு வரக்கூடாது என்றும் 48 மணித்தியாலத்துக்கும் மேலாக காய்ச்சல் நீடித்தால், உடனடியாக மருத்துவ ஆலோசனையை பெறுமாறும்வலியுறுத்தினார். (ம)

### மெகா பவர்

திகதி 15/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1027
வெற்றி எழுத்து C | சுப்பர் இலக்க 11 | வெற்றி இலக்கங்கள் 05 15 27 67

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.02.15
சீட்டிழுப்பு இலக்கம் 020
கடகம் | வெற்றி இலக்கங்கள் 05 33 36 41 | கடகம்
தேசிய லொத்தர் சபை

### செவன

திகதி 15/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 356
ஆங்கில எழுத்து P | வெல்லப்பட்ட இலக்கங்கள் 10 12 76 91
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

### மஹஜன சம்பத

திகதி 2022/02/15
சீட்டிழுப்பு இலக்கம் 4679
ஆங்கில எழுத்து M | வெல்லப்பட்ட இலக்கங்கள் 1 8 6 1 9 7
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 15.02.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2974
ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கங்கள் 37 45 49 52
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2022.02.15
சீட்டிழுப்பு இலக்கம் - 709
K | 13 38 41 61
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4334
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

### அத கோடிபதி

ADA KOTIPATHI
கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1482
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 15.02.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,221,580
வெற்றி இலக்கங்கள் 46 55 66 75 | ஆங்கில எழுத்து J
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா

கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 3817
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 15.02.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,714,180
வெற்றி இலக்கங்கள் 06 29 40 41 | ஆங்கில எழுத்து K
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1656
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 15.02.2022
தினம் செவ்வாய்
R 27 32 43 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 59,465,378/-
அபிவிருத்தி லொத்தர் சபை

### சசிரி

சீட்டிழுப்பு வாரம் 135
சீட்டிழுப்பு திகதி 15.02.2022
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 | 22 | 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,252,400/-
அபிவிருத்தி லொத்தர் சபை

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 3,990,569/-
திகதி 15.02.2022
சீட்டிழுப்பு வாரம் 3368
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 04 32 49 60 | கன்னி
2559 908
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,636,240/-
அபிவிருத்தி லொத்தர் சபை

### லக்கின

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 38 30 61 73 77
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 213,329,119/-
சீட்டிழுப்பு வாரம் 832
வர்ணம் இளஞ்சிவப்பு
திகதி 2022.02.15 செவ்வாய்க்கிழமை
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


### மீண்டும் இலட்சம் வெல்லப்பட்டது

14.02.2022 அன்று தேசிய லொத்தர் சபையின்
மஹஜன சம்பத லொத்தரில் ஆறு இலக்கங்கள்
சரிவரப் பொருந்தி 20 இலட்சம்
கனகலிங்கம் திலகவதி
யாழ். முகவர்கள் ஊடாக வெல்லப்பட்டுள்ளது.
வாங்குவோம் வெல்வோம்
கனகலிங்கம் திலகவதி
யாழ். முகவர்
(10213)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணனி வேலைக்கு ஆட்கள் தேவை

- கணனி அறிவு உள்ளவரா?
- கணனியில் பயிற்சி பெற ஆர்வமுள்ளவரா?
- வீடியோ + பபப்பிடிப்பு + படத்தொகுப்பு ஆர்வமானவரா?

(10208)

உங்களது சுயவிபரங்களை gobinath675@gmail இற்கு அனுப்பி வைக்கவும்.

077 276 5546

## HABIKON

**WE ARE HIRING !**

**வேலைச் சுருக்கம்**

எங்கள் கட்டமைப்பு வடிவமைப்பு மற்றும் ஆலோசனை நிறுவனத்திற்கு அனுபவம் வாய்ந்த வரைவாளர் தேவைப்படுகிறது. ஆகக் குறைந்தது இரண்டு வருட கால அனுபவமிக்கவராக இருத்தல் வேண்டும். நேர்முகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும்.

**Draughtsman Duties and Responsibilities**

- Fluent in 2D and 3D drawings.
- Preparation of council drawing.
- Knowledge of site measurements.

**Draughtsman requirements and qualifications**

- Associate or NVQ level 4 Qualification in drafting.
- Experience with AUTOCAD software. (2 years minimum)
- Experience with REVIT software a plus.
- Attention to detail.

(10210)

HABIKON (PVT) LTD
NO.677, POINTPEDRO ROAD,
NALLUR, JAFFNA.
EMAIL: info@habikon.lk

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10182)

076 825 7716 (ஆகாஸ்)

## வேலை வாய்ப்பு முகாம்

பல்வேறு நிறுவனங்களின் 20 இற்கு மேற்பட்ட உடனடி வேலை வாய்ப்புகளுக்கான நேர்முகத் தேர்வுகள் இன்று நடைபெறுகின்றன.

**Vacancies:**

Accounts Assistant, Data Entry, CCTV Technician, Labor, கிளினிங், Security Guard, Store Keeper, Receptionist, Media Works, Pharmacy Works, Hospital Works,...

இடம் : DEWMAS, NO.51, Amman Road, Nallur.
நேரம் : 1.00 pm to 4.00 pm (இன்று)

(10214)

077 773 3368 | 074 138 3368

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து நிலாவரை புத்தூர் றோட்டில் 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
**ஒரு பரப்பு எட்டு இலட்சம்**
புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம்.

(10211)

074 269 0854

## ஆசிரியர் வெற்றிடம்

வடமராட்சியில் இயங்கும் கல்வி நிலையத்திற்கு கணிதம், சுகாதாரம், ஆங்கிலம், தமிழ், புவியியல், வரலாறு பாடங்களுக்கு ஆசிரியர்கள் தேவை.

(தரம் 6 – 11)

077 087 2903

(C-37784)

## காணி விற்பனைக்கு

இராச பாதை வீதியில் 9 1/2 பரப்புக் காணி நான்காக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

(10216)

077 773 0567

## வேலையாள் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றுக்கு சமையல் உதவியாளர் தேவை.
11.00 AM மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்.

(10215)

077 624 8327


கோவிட், டெங்கால்

## தென்மராட்சியில் இருவர் பாதிப்பு

தென்மராட்சியில் இரண்டு நபர்களுக்கு கொரோனா, டெங்கு நோய்த் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மீசாலை கிழக்கு பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் ஒருவர், சரசாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய வர் ஒருவர் ஆகியோருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

காய்ச்சல் பாதிப்புக்கு உள்ளான இருவரும் நேற்று முன்தினம் சாவகச்சேரிஆதாரவைத்தியசாலைக்குச் சிகிச்சைக்குச் சென்றிருக்கின்றனர்.

அவர்கள் இருவரும் அன்டிஜன் மற்றும் டெங்கு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் இருவருக்கும் இரண்டு நோய்த் தாக்கங்களும் உறுதிசெய்யப்பட்டுள்ளன. (ம)

## மரண அறிவித்தல்

### செல்வி வளர்மதி சண்முகராசா



கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி வளர்மதி சண்முகராசா (வாமா) அவர்கள் நேற்று முன்தினம் (14.02.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - நேசம்மா, அரியரத்தினம் - பாக்கியம் தம்பதிகளின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சண்முகராசா - லீலாவதி ஆகியோரின் அன்பு மகளும் திகம்மதி (நியூசிலாந்து), ஜெயமதி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயபால் (நியூசிலாந்து), குமாரதாஸ் (நெதர்லாந்து) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கோண்டாவில் இல்லத்தில் இன்று (16.02.2022) புதன்கிழமை பி.ப ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2 மணியளவில் கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

215, பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (10212)

தகவல்: ந.சிறிஸ்கந்தராசா
021 222 5518


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 34 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 14 அடி பாதையுடன்
- தேவைக்கேற்ப பிரித்துக்கொடுக்கப்படும்
- நிலப்பரப்பு
- A32 பிரதான வீதியில் இருந்து 500 m தூரம்
- பயன்தரும் 165 தென்னைகள் உள்ளன
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்)

ஒரு பரப்பின் விலை 3,50,000/=

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு
077 814 7389, 077 117 8578

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 26 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- A32 பிரதான வீதியில் இருந்து 400 m தூரம்

ஒரு பரப்பின் விலை 3,00,000/=

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை

(10196)

தொடர்பு
077 814 7389, 077 117 8578

## ஹம்சியா மெடிகிளினிக்

+ பற்சிகிச்சைப் பிரிவு

(Reg. NO.PHSRC/MC/340)

HOSPITAL

நவீன உபகரணங்களின் உதவியுடன் பற்சிகிச்சை நிபுணர்களினால் நிரந்தர பல்கட்டுதல், கிளிப்போடுதல் உட்பட அனைத்து சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம். (C-3786)

578/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக இலங்கை வங்கிக்கு அருகாமையில்)
T.P:077 220 2769, 0773754490

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3785)

0768226240 DHL


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.